# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/16 - 2016 නොවැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2016.11.08

*1992/16 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

**பிரிவு 4 (2) இன் படியான பிரசுரித்தல்**

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் ''நிறுவகம்'' எனக் குறிப்பிடப்படும்.) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரித்துள்ள 2016, சனவரி 1 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான மாற்றங்களை பின்பற்றியுள்ளது. இந்த மாற்றங்கள் இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலப்பகுதியை உள்ளடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது. முன்னயை பின்பற்றுகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆளுகைக் குழுவின் கட்டளைப்படி,

அருண அல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2016, நவெம்பர் 08.

# 2016, சனவரி 1 முதல் நடைமுறைக்குவரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிலான மாற்றங்கள்

## உள்ளடக்கம்

[1] **நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச் சட்டகம்**

[2] **SLFRS 1 - இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை முதற்தடவைப் பின்பற்றுகை**

[3] **SLFRS 2 - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு**

[4] **SLFRS 3 - வியாபார இணைப்புக்கள்**

[5] **SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள்**

[6] **SLFRS 5 - விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள்**

[7] **SLFRS 6 - கனிப்பொருள் வளங்களின் அகழ்வாய்வும் மதிப்பாய்வும்**

[8] **SLFRS 7 - நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள்**

[9] **SLFRS 8 - தொழிற்பாட்டுப் பிரிவுகள்**

[10] **SLFRS 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்**

[11] **SLFRS 11 - கூட்டு ஏற்பாடுகள்**

[12] **SLFRS 12 - பிற உரிமங்களிலான நாட்டங்களை வெளிக்காட்டல்**

[13] **SLFRS 13 - சீர்மதிப்பு அளவீடு**

[14] **SLFRS 14 – பிற்போடப்பட்ட கணக்குகள்**

[15] **LKAS 1 - நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்**

[16] **LKAS 2 - இருப்புக்கள்**

[17] **LKAS 7 - காசுப்பாய்வுக் கூற்று**

[18] **LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

[19] **LKAS 10 - அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்**

[20] **LKAS 11 - நிருமாண ஒப்பந்தங்கள்**

[21] **LKAS 12 - வருமான வரிகள்**

[22] **LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

[23] **LKAS 17 - குத்தகைகள்**

[24] **LKAS 18 - வருமானம்**

[25] **LKAS 19- ஊழியர் பயன்கள்**

[26] **LKAS 20 - அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்**

[27] **LKAS 21 - அந்நிய நாணயமாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள்**

[28] **LKAS 23 - கடன்படுகைக் கிரயங்கள்**

[29] **LKAS 24 - உறவுமுறைத் தரப்பினரின் வெளிக்காட்டல்கள்**

[30] **LKAS 26 - ஓய்வுப் பயன் திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்**

[31] **LKAS 27 - வேறான நிதிக்கூற்றுக்கள்**

[32] **LKAS 28 - கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளிலான முதலீடுகள்**

[33] **LKAS 29 - மிகைப் பணவீக்க பொருளாதாரங்களில் நிதியறிக்கையிடல்**

[34] **LKAS 32 - நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்**

[35] **LKAS 33 - பங்கொன்றிற்கான வருவாய்**

[36] **LKAS 34 - இடைக்கால நிதியறிக்கையிடல்**

[37] **LKAS 36 - சொத்துக்களின் சேத இழப்பு**

[38] **LKAS 37 - ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்**

[39] **LKAS 38 - அருவச் சொத்துக்கள்**

[40] **LKAS 39 - நிதிச் சாதனங்களின் ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

[41] **LKAS 40 - முதலீட்டு ஆதனம்**

[42] **LKAS 41 - விவசாயம்**

## நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கருச் சட்டகம்

மாற்றம் இல்லை

## LKAS 1 - நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

| | |
|---|---|
| **10(e)** | **…... முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் விளக்கமளிக்கும் தகவல்கள் உள்ளடங்கலான குறிப்புக்கள்** |
| **30A** | உரிமமானது இந்த மற்றும் ஏனைய SLFRS நியமங்களை நிதிக்கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்களில் பிரயோகிக்கும் பொழுது பொருத்தமான அனைத்து காரணிகள் மற்றும் சந்தர்ப்பங்களை கருத்திற் கொள்வதுடன், அது எவ்வாறு குறிப்புக்கள் வழங்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான தகவல்களை திரட்டுகிறது என்பதை தீர்மானித்தல் வேண்டும். உரிமமொன்று பொருண்மையான தரவுகளை பொருண்மையில்லாத தரவுகளுடன் மறைப்பதன் மூலமோ அல்லது வேறுபட்ட தன்மை அல்லது தொழிற்பாடுகள் கொண்ட முக்கிய தரவுகளை ஒன்று சேர்ப்பதன் மூலமோ நிதிக்கூற்றுக்களின் விளங்கிக் கொள்ளத்தக்க தன்மையைக் குறைக்கக் கூடாது. |
| **31** | சில SLFRS நியமங்கள் குறிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்க வேண்டிய தகவல்களை குறிப்பிடுகின்றன. உரிமமொன்று இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் வெளிக்காட்டலின் விளைவினால் வெளிப்படுத்தும் தகவல்கள் பொருண்மையற்றது எனின் குறிப்பிட்ட வெளிப்படுத்தலை மேற்கொள்ள வேண்டியதில்லை. இலங்கைக் கணக்கீட்டு நியமம் குறிப்பிட்ட தேவைப்பாடுகளது பட்டியல் ஒன்றைக் கொண்டிருந்தாலோ அல்லது குறைந்தபட்சத் தேவைப்பாடு என விபரித்திருந்தாலோ, SLFRS இன் பிரத்தியேகத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடானது, குறிப்பிட்ட ஊடுசெயல்கள், ஏனைய நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் உரிமத்த்தின் நிதிநிலைமை மற்றும் நிதிப் பெறுபேறுகளில் கொண்டிருக்கும் தாக்கம் தொடர்பாகப் பயனாளர்களுக்கு விளக்கமளிக்கப் போதாததாகக் காணப்படும் போது, மேலதிக வெளிப்படுத்தல்களை மேற்கொள்வது தொடர்பாக உரிமம் கருத்தில் கொள்ளும். |
| 54 | **நிதி நிலைமைக்கூற்று கீழே தரப்படும் தொகைகளை முன்னிலைப்படுத்தும் வகையில், உருப்படிகளின் பட்டியலை உள்ளடக்கியிருக்கும்.** |
| **54(f)** | **இலங்கை கணக்கீட்டு நியமம் - (LKAS 41) *விவசாயம்* நியமத்தின் நோக்கெல்லைக்குள் அடங்கிய வகையில் உயிரியல் சொத்து;** |
| 55 | **உரிமம் ஒன்று அதன் நிதிநிலைமைக் கூற்றில், அத்தகைய முன்னிலைப்படுத்தல் உரிமத்தின் நிதிநிலைமை தொடர்பான புரிதலுக்குத் தொடர்பபட்டதாக உள்ளபோது, மேலதிக வரிசை உருப்படிகளை (பந்தி 54 இல் நிரற்படுத்தப்பட்ட வரிசை உருப்படிகளை வேறுபடுத்தி உள்ளடக்குவதுடன்) அதன் உருப்படிகளின் வரிசையையும், தலைப்புகளையும் அத்துடன் உப மொத்தங்களையும் முன்னிலைப்படுத்தும்.** |
| **55A** | **உரிமம் உப மொத்தங்களை பந்தி 55 இற்கு அமைவாக முன்னிலைப்படுத்தும் பொழுது, அந்த உப மொத்தங்கள்:**<br><br>**(a) இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு ஏற்ப ஏற்பிசைவு செய்யப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட உருப்படிகளின் வரிசை உருப்படிகளை உள்ளடக்கும்,**<br><br>**(b) வரிசை உருப்படிகள், உப மொத்தங்களைத் தெளிவாகவும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் கொண்டிருக்கும் வகையில் பெயரிடப்பட்டு முன்னிலைப்படுத்தப்படும்,**<br><br>**(c) பந்தி 45 இற்கு ஏற்ப, காலத்திற்கு காலம் நிலைத்த தன்மை மிக்கதாக இருக்கும், அத்துடன்**<br><br>**(d) நிதிநிலைமைக் கூற்றிற்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் தேவைப்பாட்டுக்குரிய உப மொத்தங்கள் மற்றும் மொத்த தொகைக்கு மேலான முக்கியத்துவத்துடன் காட்டப்படாது.** |

| | |
|---|---|
| **82A** | **ஏனைய முற்றடக்க வருமானப் பிரிவு கால அளவிற்கான வரிசை உருப்படிகளை முன்னிலைப்படுத்த வேண்டும்:**<br>**a) ஏனைய முற்றடக்க வருமானத்தின் உருப்படிகள் (பந்தி (b) யின் தொகைகள் தவிர்ந்த) ஏனைய இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு, அந்த வகையில் குழுவாக்கப்படும்:**<br>**(i) பின்னர் இலாபநட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படாதவை, அத்துடன்**<br>**(ii) குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் பொழுது பின்னர் இலாபநட்டங்களில் மீள்வகைப்படுத்தப்படுபவை.**<br>**b) உரிமையாண்மை ஏனைய முறையைப் பயன்படுத்திக் கணக்கு வைக்கப்பட்ட துணைநிலை உரிமம் மற்றும் கூட்டுத்தொழில் முயற்சியின் ஏனைய முற்றடக்க வருமானப் பங்குகள், ஏனைய இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக அந்த உருப்படிகளின் உரிமையாண்மையில் வேறாக்கப்படும்:**<br>**(i) பின்னர் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட மாட்டாதவை; மற்றும்**<br>**(ii) குறிப்பிட்ட நிபந்தனைகளை சந்திக்கும் பொழுது பின்னர் இலாபம் அல்லது நட்டமாக மீள்வகைப்படுத்தப்படுபவை.** |
| **85** | **அத்தகைய முன்னிலைப்படுத்தலானது உரிமத்தின் நிதிப் பெறுபெறுகள் தொடர்பான புரிதலுக்குத் தொடர்புமிக்கதாகக் காணப்படின், உரிமம் மேலதிக வரிசை உருப்படிகளை, (பந்தி 82 இல் நிரற்படுத்தப்பட்ட வரிசை உருப்படிகளின் விளக்கமான முன்னிலைப்படுத்தலை உள்ளடக்குவதன் மூலம்) தலைப்பு மற்றும் உப மொத்தங்களை இலாபநட்டக் கணக்கு அல்லது ஏனைய முற்றடக்க வருமானத்தில் உள்ளடக்கும்.** |
| **85A** | ஒரு உரிமம் பந்தி 85 இற்கு அமைவாக உப மொத்தங்களை முன்னிலைப்படுத்தும் பொழுது, குறிப்பிட்ட உப மொத்தங்கள்:<br>(a) இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட வரிசை உருப்படிகளை உள்ளடக்கும்;<br>(b) வரிசை உருப்படிகளில் உள்ளடக்கிய உப மொத்தங்களை, தெளிவாகவும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் பெயரிடப்பட்டு முன்னிலைப்படுத்தப்படும்;<br>(c) பந்தி 45 இற்கு ஏற்ப காலத்திற்கு காலம் நிலைத்த தன்மையானதாக இருக்கும்; அத்துடன்<br>(d) இலாபநட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானத்தில் இலங்கை கணக்கீட்டு நியமத்தில் தேவைப்படுத்தப்படும் உப மொத்தங்களை, மற்றும் மொத்தத்திற்கு மேலான முக்கியத்துவம் மிக்கதாகக் காட்டாது. |
| **85B** | உரிமம் இலாபநட்டக் கூற்று மற்றும் ஏனைய முற்றடக்க வருமானத்தில் முன்னிலைப்படுத்தும் வரிசை உருப்படிகளை இலங்கை கணக்கீட்டு நியமத்தின் தேவைப்பாட்டிற்குரிய தொகை அல்லது உப மொத்தத் தொகைக்கு இணக்கம் செய்யும். |
| **113** | **ஒரு உரிமமானது நடைமுறைக்கு எட்டிய வரையில் குறிப்புக்களை முறைசார்ந்த விதத்தில் முன்னிலைப்படுத்தும். ஒரு முறைசார்ந்த விதத்தினை தீர்மானிப்பதில், உரிமம் நிதிக் கூற்றுக்களின் விளங்கத்தக்க தன்மை மற்றும் ஒப்பிடத்தகு தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். உரிமம், நிதிநிலைமைக்கூற்று, இலாபநட்டக் கூற்று, முற்றடக்க வருமானக்கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்வுக் கூற்று தொடர்புடைய தகவல்கள் உள்ள ஒவ்வொரு பொருள்களையும் குறித்து குறிப்புகளில் குறுக்குத் தொடர்பு செய்யலாம்.** |
| **114** | குறிப்புக்களின் தொகுப்பு அல்லது முறையான வரிசைப்படுத்தல் உதாரணங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்.<br>(a) உரிமமானது அதன் நிதிநிலைமை மற்றும் நிதிப் பெறுபேறுகள் தொடர்பான புரிந்துணர்வுக்கு மிகவும் பொருத்தமான அதன் செயற்பாடுகளுக்கான பகுதிகளுக்கு |

| | |
|---|---|
| | முக்கியத்துவம் அளிக்கும். அவையாவன தகவல்களை குறிப்பிட்ட தொழிற்பாடு செயற்பாடு குழுவாக ஒன்றிணைப்பது.<br>(b) சீர்மதிப்பு பெறுமதியில் அளவிட்ட சொத்துக்களை போல அளவிட்ட ஒத்த மாதிரியான பொருட்களின் தகவல்களை தொகுத்தல். அல்லது<br>(c) இலாபநட்டக் கூற்று மற்றும் ஏனைய முற்றடக்க வருமான மற்றும் நிதிநிலைமைக் கூற்று என்பவற்றில் வரிசை உருப்படிகளைப் பின்வரும் ஒழுங்கை தொடர்ந்து, அவையாவன;<br>(i) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான இணக்கக் கூற்று (பந்தி 16 ஐப் பார்க்கவும்)<br>(ii) பிரயோகிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் (பந்தி 117 ஐப் பார்க்கவும்)<br>(iii) நிதிக்கூற்றுக்களின் நிலைப்பாடு, இலாபநட்டக் கூற்று, ஏனைய முற்றடக்க வருமானக்கூற்று, உரிமையாண்மையின் மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்வுக் கூற்று போன்றவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட உருப்படிகளின் ஆதரவான தகவல்கள், ஒவ்வொரு கூற்றுக்களும் ஒவ்வொருவரிசை உருப்படிகளையும் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒழுங்கில், அத்துடன்<br>(iv) பின்வருவன உள்ளடங்கலான, ஏனைய வெளிப்படுத்தல்கள்:<br>(1) உறுமுரிமைப் பரிப்புக்கள் (LKAS 37 ஐப் பார்க்கவும்) மற்றும், ஏற்பிசைவு செய்யப்படாத ஒப்பந்தக் கடப்பாடுகள்.<br>(2) நிதிசாரா வெளிப்படுத்தல்கள். உதாரணம் - உரிமத்தின் நிதிசார் இடர் முகாமைத்துவ குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் (SLFRS 07 ஐப் பார்க்கவும்). |
| **115** | [நீக்கப்பட்டுள்ளது] |
| **117** | **ஒரு உரிமம் அதன் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளை, பின்வருவன உள்ளடங்கலாக வெளிப்படுத்த வேண்டும்.** |
| **119** | ஒரு குறிப்பிட்ட கணக்கீட்டு கொள்கையானது வெளிப்படுத்த வேண்டுமா என்பதை தீர்மானிக்க முகாமைத்துவமானது, வெளிப்படுத்தல்கள் அறிக்கையிடல் நிதிப் பெறுபேறு மற்றும் நிதி நிலைமைகளில் ஊடுசெயல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் எவ்வாறு பயனர்களை வழிநடத்துகிறது என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உரிமமும் அதன் தொழிற்பாட்டின் தன்மையையும், அதன் நிதிக் கூற்றுக்களின் பயனர்கள் எதிர்பார்க்கக்கூடிய, அவ்வகையான உரிமத்தில் எதிர்பார்க்கக்கூடிய வெளிப்படுத்தல்களை கருத்திற்கொள்ளும். இலங்கை கணக்கீட்டு நியமங்களில் அனுமதிக்கப்பட்ட மாற்றுத் தெரிவுகளில் இருந்து அக் கொள்கைகள் தேர்வு செய்யப்படும் பொழுது குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் வெளிப்படுத்தல்கள் அதன் பயனர்களுக்கு மிகச்சிறந்த உதவியாக அமையும். உதாரணம்: உரிமம் அதன் முதலீட்டு ஆதன வெளிப்படுத்தலுக்காக சீர்மதிப்பையா அல்லது கிரய மாதிரியையா பிரயோகிக்கிறது என்பது தொடர்பான வெளிப்படுத்தல். (LKAS 40 முதலீட்டு ஆதனத்தை பார்க்கவும்). சில இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிட்ட கணக்கீட்டு கொள்கைகளின் வெளிப்படுத்தல்களை குறிப்பாக தேவையாக்குகிறது, முகாமைத்துவத்தால் அனுமதிக்கப்பட்ட வெவ்வேறுபட்ட கொள்கையில் இடையிலான தெரிவுகள் உள்ளடங்கியது. உதாரணமாக: LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் பயன்படுத்திய அளவீட்டு அடிப்படைகளின் வெளிப்படுத்தல்களை தேவையாக்குகிறது. |
| **120** | [நீக்கப்பட்டுள்ளது] |
| **122** | **ஒரு உரிமம், அதன் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் அல்லது ஏனைய குறிப்புக்களுடன் முகாமை உரிமத்தின் கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயற்பாட்டில் மேற்கொண்டதும், நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட** |

| | |
|---|---|
| | **தொகைகள் மீது தாக்கத்தைக் கொண்டதுமான மதிப்பீடுகளுடன் தொடர்புபட்டிராத சுயதீர்ப்புக்களை (பந்தி 125 இனைப் பார்க்கவும்) வெளிப்படுத்தும்.** |
| **139P** | *வெளிக்காட்டல் முயற்சி* (LKAS1 இற்கான திருத்தங்கள்) மார்ச் 2015 இல் வழங்கப்பட்டது, இதன்படியாக, திருத்தப்பட்ட பந்திகள் 10, 31, 54-55, 82A, 85, 113-114, 117, 119 மற்றும் 122. சேர்க்கப்பட்ட பந்திகள் 30A, 55A, மற்றும் 85A-85B மற்றும் நீக்கப்பட்ட பந்திகள் 115 மற்றும் 120. உரிமம் இந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஆண்டுக் காலங்களுக்குப் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமங்கள் இந்த திருத்தங்களுடன் தொடர்புடைய வகையில் LKAS 8 இன் பந்திகள் 28-30 இன் தேவைப்பாடுகளை வெளிக்காட்டத் தேவையில்லை. |

## LKAS 2 - இருப்புக்கள்

மாற்றம் இல்லை

## LKAS 7 - காசுப்பாய்வுக் கூற்று

மாற்றம் இல்லை

## LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

மாற்றம் இல்லை

## LKAS 10 - அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

மாற்றம் இல்லை

## LKAS 11 - நிருமாண ஒப்பந்தங்கள்

மாற்றம் இல்லை

## LKAS 12 - வருமான வரிகள்

மாற்றம் இல்லை

## LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | |
|---|---|
| 3(b) | தாங்குபயிர்கள் தவிர்ந்த விவசாய செயற்பாடுடன் தொடர்புடைய உயிரியல் சொத்துக்கள் (LKAS 41 *விவசாயம்* நியமத்தைப் பார்க்கவும்). இந்த நியமம் தாங்குபயிர்களுக்கு பிரயோகிக்கத்தக்கதாகும், ஆனால் தாங்குபயிர்களின் உற்பத்திக்குப் பிரயோகிக்கப்படலாகாது. |

| | |
|---|---|
| 6 | கீழ்வரும் பதங்கள் அங்கு விபரிக்கப்பட்ட அர்த்தங்களுடன் இந்நியமத்தில் பயன்படுத்தப்படும்.<br><br>தாங்குபயிர் என்பது பின்வரும் இயல்புகளைக் கொண்ட ஓர் பயிர் ஆகும்:<br><br>(a) விவசாய விளைச்சல்களில் உற்பத்தி அல்லது வழங்கல்களுக்கு பயன்படுத்தப்படும்.<br><br>(b) ஒன்றுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு தாங்குபயிர்களின் விளைச்சல்களுக்கென எதிர்ப்பார்க்கப்படும்.<br><br>(c) விவசாய விளைச்சல்களாக விற்பனையாக்குவது மிக குறைந்த சாத்தியத்தை கொண்டது, சந்தர்ப்பவசமான விற்பனை தவிர.<br><br>(LKAS 41 இன் பந்திகள் 5A-5B தாங்குபயிருக்கான வரைவிலக்கணத்தை விளக்குகிறது.)<br><br>*முன்கொண்டுசெல்லல் தொகை* என்பது ஒரு சொத்தினை அதன் மீதான யாதேனும் திரண்ட தேய்மானமும், திரண்ட சேத இழப்பும் கழிக்கப்பட்டு ஏற்பிசைவு செய்யப்படும் தொகையாகும்.<br><br>*கிரயம்* என்பது ஒரு சொத்தை கையேற்றல் அல்லது கட்டுதலின் போது, கையேற்பதற்காக கொடுக்கப்பட்ட காசு அல்லது காசுக்குச் சமமானவையின் தொகை அல்லது கொடுக்கப்பட்ட குறித்த வேறு கைமானத்தின் சீர்மதிப்பு அல்லது பாவிக்கப்படும் போது மாத்திரம் ஆரம்பத்தில் அந்த சொத்தை இலங்கை கணக்கீட்டு அணிகளின் தேவைகளின் பிரகாரம் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை. உதாரணம் SLFRS 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு.<br><br>*தேய்விடத்தகு தொகை* என்பது ஒரு சொத்தின் கிரயம் அல்லது கிரயத்திற்காக நிதிக்கூற்றுக்களில் பதிவு வைத்த வேறு தொகைகளில் ஈற்றுப் பெறுமதி கழிக்கப்பட்ட தொகையாகும்.<br><br>*தேய்மானம்* என்பது ஒரு சொத்தின் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக அதன் தேய்விடத்தகு தொகையை முறைசார்ந்த வகையில் ஒதுக்கீடு செய்வதாகும்.<br><br>*உரிமம் சார்ந்த பெறுமதி* என்பது ஒரு உரிமம் ஒரு சொத்தின் தொடர் உபயோகத்தால் பெற எதிர்ப்பார்க்கும் காசுப்பாய்வுகள் மற்றும் அதன் பயன்தரு ஆயுள் முடிவில் விற்பனை செய்யும் பொழுது பெறக்கூடிய காசு ஆகியனவையின் தற்போதைய பெறுமதி அல்லது பரிப்பைத் தீர்ப்பதற்காக செலவு செய்ய எதிர்பார்த்திருக்கும் தொகை.<br><br>*சீர்மதிப்பு* என்பது சிநேகபூர்வமற்ற ஊடுசெயலில் அறிவும் விருப்பமும் உள்ள தரப்பினர்களுக்கு இடையே ஒரு சொத்தைப் பரிமாற்றக் கூடிய அல்லது பரிப்பொன்றினை தீர்க்கக்கூடிய தொகையாகும். (SLFRS 13 - சீர்மதிப்பு அளவீடு நியமத்தைப் பார்க்கவும்)<br><br>*சேத இழப்பு நட்டம்* என்பது சொத்தொன்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகை, அதிலிருந்து வசூலிக்கப்படும் (மீளப்படும்) தொகையினை விட எவ்வளவால் அதிகமாக உள்ளதோ அந்தத் தொகையாகும். |
| 22A | தாங்குபயிர்கள் முகாமையினால் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படுவதற்கான இருப்பிடம் மற்றும் நிலைமைக்கு முன்னான சுய-உருவாக்க ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளை ஒத்த வகையில் கணக்கீடு செய்யப்படும். அதன் விளைவாக, இந்த நியமத்தில் 'நிருமாணம்' என்பதற்கான விளக்கங்கள் தாங்குபயிர்களை முகாமைத்துவத்தால் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு முன்னரான இடம் மற்றும் நிலைமைக்கு ஏற்ற முறையில் தொழிற்படுவதற்கான அவற்றின் அறுவடைக்கான செயற்பாடுகளாக வாசிக்கப்பட வேண்டும். |
| 37(i) | தாங்குபயிர்கள் |
| 56(c) | உற்பத்தியின் மேம்படுத்தல் அல்லது மாற்றங்களால் அல்லது சொத்தின் உற்பத்தி அல்லது சேவை வெளியீடுகளின் சந்தைக் கேள்விகளின் மாற்றத்தினாலெழும் தொழிற்திறன் அல்லது வர்த்தக வழக்கிழப்பு மாற்றம். ஒரு சொத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால விற்பனை விலையின் வீழ்ச்சியானது பொருளின் தொழிற்திறன் அல்லது வர்த்தக வழக்கிழப்பை வெளிப்படுத்த, அது அந்த சொத்தின் எதிர்கால பொருளாதார பயன்களின் எதிர்கால வீழ்ச்சியை பிரதிபலிக்கும். |

| | |
|---|---|
| 62A | சொத்தின் பயனை உள்ளடக்கிய செயற்பாட்டைக் கொண்ட நடவடிக்கை மூலம் உருவாக்கப்பட்ட வருமானத்தை அடிப்படையாக கொண்ட பொருத்தமற்ற தேய்மான முறை. சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கிய செயற்பாட்டினால் உருவாக்கப்பட்ட வருமானமானது அந்த சொத்தின் பொருளியல் தன்மைகள் தவிர்ந்த காரணிகளை பொதுவாக பிரதிபலிக்கும். உதாரணமாக, வருமானமானது ஏனைய உள்ளீடுகள் மற்றும் செயன்முறைகள், விற்பனை நடவடிக்கைகள் மற்றும் விலை மாற்றத்தால் பாதிக்கப்படும். வருமானத்தின் விலைக் கூறானது சொத்து எவ்வாறு நுகரப்படுகின்றது என்பதை கருத்திற் கொள்ளாத பணவீக்கத்தால் பாதிப்படையும். |
| 80B | அறிக்கையிடல் காலப் பகுதியில் *விவசாயம்: தாங்குபயிர்கள்* (LKAS 16 மற்றும் LKAS 41 நியமங்களுக்கான திருத்தங்கள்) முதற்தடவையாகப் பிரயோகிக்கும் போது உரிமமானது LKAS 08 இன் பந்தி 28(F) இனால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் தகவல்களை நடைமுறைக் காலத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய தேவை இல்லை. ஆயினும், உரிமமானது LKAS 08 பந்தி 28(F) இனால் தேவைப்படுத்தப்பட்ட அளவுசார் தகவல்களை முன்னிலைப்படுத்தும் ஒவ்வொரு காலப்பகுதிக்கும் முன்னிலைப்படுத்தும். |
| 80C | உரிமம் முதன்முதலாக விவசாயம்: தாங்குபயிர்கள் (LKAS 16 மற்றும் LKAS 41 நியமங்களுக்கான திருத்தங்கள்) நியமத்தை பின்பற்றும் அறிக்கையிடல் காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள மிக முன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்தில் தாங்குபயிர்களின் உருப்படியொன்றினை அதன் சீர்மதிப்பில் அளவிடத் தெரிவு செய்வதுடன், அந்த சீர்மதிப்பையே அத் திகதியிலான கருதப்பட்ட கிரயமாகக் கொள்ளும். முன்னயை கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் சீர்மதிப்பு ஆகியவற்றுக்கு இடையிலான ஏதேனும் வேறுபாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்ட மிகமுன்னைய காலப்பகுதியின் ஆரம்பத்திலான ஆரம்ப நிறுத்தி வைத்த உழைப்புக்களில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| 81I | *பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதியழிவிற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளின் விளக்கமளிப்பு* (LKAS 16 மற்றும் LKAS 38 இற்கான திருத்தங்கள்), 2016, பெப்புருவரி இல் வழங்கப்பட்டது, திருத்தப்பட்ட பந்தி 5, சேர்க்கப்பட்ட பந்தி 62A. உரிமங்கள் அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஆண்டுக் காலங்களுக்கு பிற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| 81K | விவசாயம்: தாங்குபயிர்கள் (LKAS 16 மற்றும் LKAS 41 இற்கான திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்திகள் 3, 6 மற்றும் 37 திருத்தபட்டுள்ளதுடன், பந்திகள் 22A மற்றும் 80B-80C சேர்க்கப்பட்டும் உள்ளன. உரிமமொன்று அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் முற்கூட்டிய காலத்தில் அந்த திருத்தங்களை பிரயோகிக்கும் பொழுது அந்த உண்மையை வெளிப்படுத்த வேண்டும். LKAS 08 இற்கு அமைவாக பந்தி 80C இல் குறிப்பிட்ட திருத்தங்களை முற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்கலாம். |

## LKAS 17 - குத்தகைகள்

| | |
|---|---|
| 2 | (c) LKAS 41 விவசாயத்தின் நோக்கெல்லையினுள் நிதிக்குத்தகையின் கீழ்க்குத்தகைக்கு எடுத்தவரால் வைத்திருக்கப்படும் உயிரியல் சொத்து, அல்லது<br>(d) LKAS 41 விவசாயத்தின் நோக்கெல்லையினுள் தொழிற்பாட்டுக் நிதிக்குத்தகையின் கீழ் குத்தகைக்கு வழங்கியவரால் வழங்கப்பட்ட உயிரியல் சொத்து |

## LKAS 18 - வருமானம்

மாற்றம் இல்லை

## LKAS 19- ஊழியர் பயன்கள்

| | |
|---|---|
| 83 | தொழிலுக்கு பிந்திய பயன் கடப்பாடுளை (நிதியளிக்கப்பட்ட மற்றும் நிதியளிக்கப்படாத இரண்டையுமே) கழிவீடு செய்யப் பயன்படுத்தும் வீதமானது உயர்தர கூட்டுவணிக பிணைகளின் அறிக்கையிடல் கால இறுதியில் உள்ள சந்தை விளைவுகளை குறிப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படும். அத்தகைய உயர் தரமான கூட்டுவணிகப் பிணையங்களுக்கான ஆழமான சந்தையைக் கொண்டிராத நாணயங்களுக்கு, சந்தை விளைவுகள் (அறிக்கையிடல் காலத்தின் இறுதியில்) அந்த நாணயத்திலமைந்த அரச பிணைகளுக்கான வீதத்தில் பயன்படுத்தப்படும். கூட்டுவணிக பிணையங்கள் அல்லது அரச பிணையங்களுக்கான நாணயமானது, தொழிலுக்குப் பின்னான பயன் கடப்பாட்டின் நாணயம் நிபந்தனைகளுக்கு நிலைமாறாததாக இருக்கும். |
| 176 | IASB யின் வருடாந்த திருத்தங்களின் 2012-2014 சுற்றோட்டப் பின்பற்றுகை, செத்தெம்பர், 2014 இல் வழங்கப்பட்டது. பந்தி 83 திருத்தப்பட்டதுடன் பந்தி 177 சேர்க்கப்பட்டது. உரிமமொன்று அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்த திருத்தத்தை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| 177 | உரிமம், பந்தி 176 இல் உள்ள திருத்தங்களை, அது திருத்தங்களைப் பிரயோகித்த முதலாவது நிதிக் கூற்றுக்களிலான ஆரம்ப ஒப்பீட்டு காலம் முதல் பிரயோகிக்கும். திருத்தங்களைப் பிரயோகிப்பதால் ஏற்படும் ஆரம்ப செம்மையாக்களை அந்த காலத்தின் ஆரம்பத்தில் நிறுத்திவைத்த வருமானங்களில் ஏற்பிசைவு செய்யலாம். |

## LKAS 20 - அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்

மாற்றம் இல்லை

## LKAS 21 - அந்நிய நாணயமாற்று வீதங்களிலான மாற்றங்களின் தாக்கங்கள்

மாற்றம் இல்லை

## LKAS 23 - கடன்படுகைக் கிரயங்கள்.

| | |
|---|---|
| **4(a)** | தகைமைபெறும் சொத்து அதன் சீர்மதிப்பில் அளவிடப்படும். உதாரணமாக LKAS 41 விவசாயத்தின் நோக்கெல்லைக்குள் உள்ளடங்கிய ஒரு உயிரியல் சொத்து. |
| **7(f)** | தாங்குபயிர்கள். |

## LKAS 24 - உறவுமுறைத் தரப்பினரின் வெளிக்காட்டல்கள்

மாற்றம் இல்லை

## LKAS 26 - ஓய்வுப் பயன் திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்

மாற்றம் இல்லை

## LKAS 27 - வேறான நிதிக்கூற்றுக்கள்

| | |
|---|---|
| 4 | **இந் நியமத்தில் பயன்படுத்தப்படுகின்ற பதங்களின் கருத்துக்கள் குறிப்பதாவது:**<br><br>***ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* என்பது முதனிலை உரிமம் மற்றும் உப உரிமங்கள் யாவும் ஒரு தனிப் பொருளியல் உரிமமாக கருதப்பட்டு ஒரு குழுமத்தின் சொத்துக்கள், பரிப்புக்கள், உரிமையாண்மை, வருமானம் மற்றும் செலவினங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் ஆகும்.**<br><br>***வேறான நிதிக்கூற்றுக்கள்* என்பது, <u>இந்த நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில், உரிமம் தமது உப துணைக் கம்பனிகளிலான, கூட்டுத் தொழில் வணிகங்களிலான மற்றும் இணைந்த கம்பனிகளிலான முதலீடுகளை கிரயம் அல்லது SLFRS 9 நிதிச் சாதனங்கள் நியமத்துக்கு இணக்கமான வகையில் கணக்கீடு செய்வதா LKAS 28 *கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலான முதலீடுகள்* நியமத்தில் விபரிக்கப்பட்டவாறு உரிமையாண்மை முறையில் கணக்கீடு செய்வதா எனத் தெரிவு செய்து முன்னிலைப்படுத்தப்படுபவையாகும்.</u>** |
| 5 | கீழ்வரும் பதங்கள் SLFRS 10 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு A, SLFRS 11 கூட்டு ஏற்பாடுகளின் பின்னிணைப்பு A மற்றும் LKAS 28 இன் பந்தி 3 இனால் சொற்பத விளக்கம் தரப்படுகின்றது.<br>• துணைநிலை நிறுவனம்<br>• கட்டுப்படுத்தும் அதிகாரம்<br>• <u>உரிமையாண்மை முறை</u><br>• குழுமம்<br>• முதலீட்டு உரிமம்<br>• கூட்டான கட்டுப்பாடு<br>• கூட்டுத்தொழில் முயற்சி<br>• கூட்டுத்தொழில் முயற்சியாளர்<br>• முதனிலை உரிமம்<br>• கணிசமான செல்வாக்கு<br>• கீழ்நிலை உரிமம் |
| 6 | வேறான நிதிக்கூற்றுக்கள் என்பது ஒன்றித்த நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமாக அல்லது துணை உரிமத்தில் முதலீடு அற்ற ஆனால் இணைநிலை உரிமம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியில் முதலீட்டைக் கொண்டுள்ள அல்லது துணைநிலை உரிமத்தின் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியில் உள்ள முதலீடுகள் பந்தி 8-8A விளக்கப்பட்ட சூழ்நிலைகள் தவிர்ந்தஇ LKAS28 இன் தேவைப்பாடுகளுக்கேற்ப உரிமையாண்மை முறையை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளுக்கு மேலதிகமாக முன்னிலைப்படுத்தப்படுபவை ஆகும். |
| 7 | ஒரு உரிமம் கீழ்நிலை உரிமம், துணைநிலை உரிமம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியாளர்களின் கூட்டுத்தொழில் முயற்சியில் உள்ள ஈடுபாடு அற்றதாயின் அதன் நிதிக்கூற்றுகள் வேறான நிதிக்கூற்றுக்கள் ஆகாது. |
| **10** | **ஒரு உரிமம் வேறான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது, அது கீழ்நிலை உரிமத்தில் முதலீடுகள், கூட்டுத்தொழில் முயற்சி மற்றும் துணைநிலை நிறுவனத்தை கீழ்வரும் ஒரு முறையில் கணக்கீடு செய்யலாம்.**<br><br>**(a) கிரயத்தில்**<br><br>**(b) SLRFS 9 இற்கு அமைவாக; அல்லது**<br><br>**(c) <u>LKAS 28 இல் விபரிக்கப்பட்ட வகையில் உரிமையாண்மை முறையை பயன்படுத்தி</u>**<br><br>**அந்நிறுவனம் ஒவ்வொரு வகையிலான முதலீடுகளை ஒரே கணக்கீட்டு முறையில் பிரயோகிக்கலாம். கிரயத்தில் அல்லது <u>உரிமையாண்மை முறையை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்பட்ட முதலீடுகள்</u> ஆனது SLFRS 5 விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளின் படி விற்பனைக்காக அல்லது விநியோகத்திற்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படும் போது SLFRS 5 இற்கு அமைவாக கணக்கீடு செய்யப்படும். (அல்லது விற்பனைக்காக அல்லது விநியோகத்திற்காக வைத்திருந்த வகைப்படுத்தப்பட்ட விலக்கல் தொகுதியில் உள்ளடக்கப்பட்டது). SLFRS 9 இற்கு** |

| | |
|---|---|
| | **அமைவாக கணக்கீடு செய்யப்பட்ட முதலீடுகளின் அளவீடுகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மாறாது.** |
| 11B | ஒரு முதனிலை உரிமம், முதலீட்டு உரிமம் அல்லது முதலீட்டு உரிமமாக வருவதை முடிவுறுத்தும் பொழுது, அது நிலைமாற்றம் ஏற்பட்ட திகதியில் இருந்து கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றத்தை கணக்கிட வேண்டும்;<br>(a) ஒரு உரிமமானது முதலீட்டு உரிமமாக இருப்பதை முடிவுக்கு கொண்டு வரும்போது, அவ்வுரிமமானது கீழ்நிலை உரிமத்தில் உள்ள முதலீட்டை பந்தி 10 இற்கு அமைவாக கணக்கீடு செய்ய வேண்டும். நிலைமாற்றம் ஏற்பட்ட திகதி சுவீகரிப்பு திகதியாக கருதப்படும். பந்தி 10 இற்கு அமைவாக முதலீட்டை கணக்கீடு செய்யும் போது சுவீகரிப்பு திகதியாக கருதப்படும் தினத்தில் உள்ள கீழ்நிலை உரிமத்தின் சீர்மதிப்பு பெறுமதி மாற்றிக்கொண்ட சலுகையாக கருதப்படும்.<br>I. **(நீக்கப்பட்டது)**<br>II. **(நீக்கப்பட்டது)**<br>(b) ஒரு உரிமம் முதலீட்டு நிறுவனமாக ஆகும் பொழுது, அது SLFRS 09 இற்கு அமைவாக கீழ்நிலை உரிமத்தில் உள்ள முதலீட்டை இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் கணக்கீடு செய்யலாம். முன்னைய முன்கொண்டு செல்லப்பட்ட கீழ்நிலை உரிமத்தின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் முதலீட்டாளரின் நிலைமாற்றம் ஏற்பட்ட தினத்தில் உள்ள சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு வருமானம் அல்லது நட்டமாக இலாபநட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.<br>குறிப்பிட்ட கீழ்நிலை உரிமங்களிற்கு அமைவாக ஏனைய முற்றடக்க வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வருமானம் அல்லது நட்டத்தின் ஒட்டுமொத்த தொகை முதலீட்டு நிறுவனமானது குறிப்பிட்ட கீழ்நிலை உரிமங்களின் நிலைமாற்றம் ஏற்பட்ட தினத்தில் விற்கப்பட்டதாக அனுகப்படும். |
| 12 | **ஒரு கீழ்நிலை உரிமம், ஒரு கூட்டுத்தொழில் முயற்சி அல்லது ஒரு துணைநிலை உரிமத்தில் இருந்து வரும் பங்கு இலாபங்கள் அந்த உரிமத்தின் பங்கு இலாபத்தை பெற்றுக்கொள்ளும் உரிமை ஏற்படுத்தப்பட்ட தினத்தில் வேறான நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படும். பங்கு இலாபமானது உரிமம் உரிமையாண்மை முறையைத் தேர்வு செய்த பொழுதில் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும், அச்சந்தர்ப்பத்தில் பங்குலாபம் முதலீட்டின் முன்கொண்டு செல்லப்பட்ட தொகையில் இருந்து குறைப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.** |
| 18J | *வேறான நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை முறை* (LKAS27 இன் திருத்தங்கள்) 2015, மாச்சு இல் வழங்கப்பட்டது. பந்திகள் 4-7, 10, 11B மற்றும் 12 திருத்தப்பட்டன. LKAS 08 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்திற்கு அமைவாக ஒரு உரிமம் இந்த திருத்தத்தை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பின்னோக்கிய காலப் பிரயோகத்தை மேற்கொள்ளும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றுக்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

## LKAS 28 - கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளிலான முதலீடுகள்

| | |
|---|---|
| **17(d)** | ஒரு உரிமத்தின் இறுதி அல்லது ஏதேனும் இடைநிலை முதனிலை உரிமம் SLFRS இற்கு இணங்க மக்கள் பாவனைக்கு கிடைக்கக்கூடிய வகையில் SLFRS 10 இற்கு அமைவாக கீழ்நிலை உரிமங்களானது ஒன்றிணைக்கப்படும் அல்லது இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படும் நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் பொழுது |

| | |
|---|---|
| **25** | ஒரு உரிமத்தின் துணைநிலை நிறுவனம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் மீதான முதலீட்டாளரின் உரிமை நாட்டம் குறைய, ஆனால் முதலீட்டானது ஒரு துணைநிலை உரிமமாகவோ அல்லது ஒரு கூட்டுத்தொழில் முயற்சியாகவோ தொடர்ந்தும் வகைப்படுத்தப்படும் போது, உரிமமானது முன்னர் ஏனைய முற்றடக்க வருமானத்தில் இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டாளரின் உரிமை நாட்டம் குறைதலுடன் தொடர்புடைய இலாபம் அல்லது நட்டம் தொடர்புடைய சொத்துக்கள் அல்லது பரிப்புக்கள் விற்பனையாகும் போது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்பட வேண்டியிருப்பின், உரிமை நாட்டம் குறைப்புத் தொடர்பாக முன்னர் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பகுதிகளை இலாபநட்டங்களுக்கு மீள வகைப்படுத்தும். |
| **27** | இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான குழுமம் ஒன்றின் பங்கானது இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான முதனிலைக் கம்பனி மற்றும் சேய்க்கம்பனிகளின் உரிமையின் திரட்டாகும். இந் நோக்கத்திற்காக குழுமத்தின் ஏனைய இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி மீதான உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சி ஒன்று சேய்க்கம்பனிகள், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளைக் கொண்டிருக்கும் போது, உரிமையாண்மை முறையினைப் பிரயோகிக்கும் போது கணக்கில் எடுக்கப்படும் இலாபநட்டங்கள், ஏனைய முற்றடக்க வருமானம் மற்றும் தேறிய சொத்துக்கள் ஆகியன ஓரினத்தன்மை வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அவசியமான சீராக்கங்களின் பின்னர் இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் நிதிக்கூற்றுக்களில் (இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சிகளது சேய்க்கம்பனிகள், இணைக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில் முயற்சியின் இலாபம் அல்லது நட்டம், ஏனைய முற்றடக்க வருமானங்கள் மற்றும் நிகர சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஏற்பிசைவு செய்யப்படுகின்றன (பந்தி 35 மற்றும் 36A இனைப் பார்வையிடவும்). |
| **36** | பந்தி 36A இல் விவரிக்கப்பட்டவை தவிர, ஒரு துணைநிலை உரிமம் அல்லது ஒரு கூட்டுத்தொழில் முயற்சியானது அந்த உரிமத்தின் ஒரேமாதிரியான சூழ்நிலைகளுக்கான ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகள் தவிர்ந்த கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும், உரிமம் துணைநிலை உரிமத்தின் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் நிதிக்கூற்றுகள், முயற்சியாண்மை முறையை பிரயோகிக்கும் பொழுது துணைநிலை உரிமம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சிகளின் கணக்கீட்டு கொள்கைகளை உரிமத்திற்கு அமைவாக தக்கவைத்துக்கொள்ள செம்மையாக்கங்கள் செய்யப்படும். |
| **36A** | பந்தி 36 இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது, ஒரு முதலீட்டு உரிமமல்லாத உரிமம் ஒன்று, ஓர் துணைநிலை உரிமம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் மீது நாட்டத்தைக் கொண்டிருக்கும் பொழுது, அந்த உரிமமானது, முயற்சியாண்மை முறையை பிரயோகிக்கும் பொழுது, அவ்வுரிமமானது முதலீட்டு உரிமத்தின் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் கீழ்நிலை உரிமங்களின் ஆர்வங்களிற்கு பிரயோகித்த சீர்மதிப்பு பெறுமதியை தக்கவைத்துக்கொள்ளும். |
| **45B** | *வேறான நிதிக்கூற்றுக்களின் உரிமையான்மை முறை* (LKAS 27 இற்கு திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்தி 25 திருத்தப்பட்டது. LKAS 08 இன் கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களிற்கு அமைவாகஒரு உரிமமானது அந்த திருத்தங்களை 01 சனவரி, 2016 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலத்திற்கு பின்னோக்கிய காலப்பிரயோகத்தை பிரயோகிக்கலாம்.<br><br>முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| **45D** | முதலீட்டு உரிமங்கள்:- ஒருங்கிணைப்பு விதிவிலக்கு பிரயோகிக்கும் போது (SLFRS 10, SLFRS 12 மற்றும் LKAS 28 இற்கு திருத்தங்கள்). 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்திகள் 17, 27 மற்றும் 36 திருத்தியும் மற்றும் 36A சேர்க்கப்பட்டுள்ளது. உரிமமொன்று அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்த திருத்தத்தை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

## LKAS 29 - மிகைப் பணவீக்க பொருளாதாரங்களிலான நிதியறிக்கையிடல்

மாற்றம் இல்லை

## LKAS 32 - நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்

மாற்றம் இல்லை

## LKAS 33 - பங்கொன்றிற்கான வருவாய்

மாற்றம் இல்லை

## LKAS 34 - இடைக்கால நிதியறிக்கையிடல்

| | |
|---|---|
| 5(e) | .....குறிப்புக்கள், பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விரிவாக்கப்பட்ட தகவல்கள் உள்ளடங்கியது. |
| 16A | **பந்திகள் 15-15C இற்கு அமைவாக பொருண்மையான நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்களின் வெளிப்படுத்தல்களுக்கு மேலதிகமாக, ஒரு உரிமமானது கீழ்வரும் தகவல்களை இடைக்கால நிதிக்கூற்றுகளில் உள்ள குறிப்புகளில் அல்லது <u>இடைக்கால நிதிக்கூற்றுகளில் ஏதேனும் இடத்தில் உள்ளடக்க வேண்டும். கீழ்வரும் வெளிப்படுத்தல்கள், இடைக்கால நிதிக்கூற்றுகளிலோ அல்லது நிதிக்கூற்றுகளின் பயனர்களுக்கு இடைக்கால நிதிக்கூற்றுயைப் போல ஒரே நியதிகளில் இருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கத் தக்கதாகவிருக்கும் இடைக்கால நிதிக்கூற்றுகளிற்கு ஏனைய சில அறிக்கைகளுடன் குறுக்காக குறிப்பிடுவதன் மூலம் இணைக்கப்பட (இடர் அறிக்கை அல்லது முகாமை விளக்கங்கள்) வேண்டும். நிதிக்கூற்றுகளின் பயனர்களுக்கு ஒரே நேரத்தில் குறுக்கு விபரங்கள் கூட்டிணைக்கப்பட்ட தகவல்களுக்கு அனுமதி இல்லாவிடின், அந்த இடைக்கால நிதிக்கூற்று முழுமையற்றதாகும். அந்த தகவல்களானது பொதுவாக நிதியாண்டுக்கான திகதி அடிப்படையில் அறிக்கையிடப்படும்.</u>** |
| <u>56</u> | <u>IASB இன் வருடாந்த திருத்தங்கள் 2012-2014 சுழற்சியின் பின்பற்றுகை 2014, செத்தெம்பரில் வழங்கப்பட்டது. பந்தி 16A திருத்தப்பட்டது. உரிமங்கள் அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு LKAS 08 *கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* என்னும் நியமத்திற்கு அமைய முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.</u> |
| <u>57</u> | <u>*வெளிப்படுத்தல்கள் முயற்சி* (LKAS இற்கான திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது, பந்தி 5 திருத்தப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும். அந்த திருத்தத்தின் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.</u> |

## LKAS 36 - சொத்துக்களின் சேத இழப்பு.

| | |
|---|---|
| 2(g) | **<u>LKAS 41 *விவசாயம்* நியமத்தின் பரப்பெல்லைக்கு உட்பட்ட</u> விவசாய செயற்பாடுகளுடன் தொடர்புடைய உயிரியல் சொத்துக்கள் சீர்மதிப்பிலிருந்து விற்பனை கிரயத்தினை கழிக்க வரும் தொகையில் அளவிடப்படும்.** |

## LKAS 37 - ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்.

மாற்றம் இல்லை

## LKAS 38 - அருவச் சொத்துக்கள்.

| | |
|---|---|
| 92 | தரப்பட்ட மிக விரைவான தொழில்நுட்ப மாற்றத்தின் வரலாறுகளின் படி, கணினி மென்பொருள் மற்றும் அநேக ஏனைய அருவச் சொத்துக்கள் தொழில்நுட்ப வழக்கிழப்பிற்கு உட்பட சந்தேகத்திற்குரியது. ஆதலால், அவற்றின் ஆயுள் மிகக் குறைவானதாக கருதப்படுகின்றது. அருவச் சொத்துக்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளின் எதிர்பார்க்கப்படும் விற்பனை விலையின் வீழ்ச்சியானது அந்த சொத்திற்கு எதிர்பார்க்கப்படும் தொழிநுட்ப அல்லது வர்த்தக வழக்கிழப்பை வெளிப்படுத்துகிறது. அது மற்ற வகையில் அந்த சொத்தின் சேர்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகளில் உள்ள வீழ்ச்சியை வெளிப்படுத்தலாம். |
| 98A | ஒரு அருவச் சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கிய தொழிற்பாட்டை கொண்டு உருவாக்கப்பட்ட வருமானத்தை அடிப்படையாக கொண்ட பெறுமதியிழப்பு முறையானது பொருத்தமற்றது என மீளப்பெறத்தக்க அனுமானம் ஒன்று மேற்கொள்ளப்படுகிறது. அருவச் சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கிய வருமானத்தை உருவாக்கும் தொழிற்பாடானது அந்த அருவச் சொத்துடன் சேர்ந்துள்ள பொருளாதார பயன்களின் நுகர்விற்கு நேரடியாக இணைக்கப்படாத காரணிகளை வழமையாக பிரதிபலிக்கின்றது. உதாரணமாக, வருமானமானது ஏனைய உள்ளீடுகள் மற்றும் செயன்முறைகள், விற்பனை தொழிற்பாடுகள் மாற்றும் விற்பனை தொகை மற்றும் விலையில் ஏற்படும் மாற்றம் போன்ற காரணிகளால் தாக்கமடைகின்றது. வருமானத்தில் விலைக் கூறானது அது ஒரு சொத்து எவ்வாறு நுகரப்படுகின்றது என்பதை கவனத்திற்கு கொள்ளாது பணவீக்கத்தால் தாக்கமடைகின்றது. இந்த அனுமானமானது வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் மாத்திரமே தோற்கடிக்கப்படக்கூடியது.<br><br>(a) பந்தி 98C இல் விளக்கப்பட்டதிற்கு அமைவாக அருவச்சொத்தானது வருமானத்தினை அளவீடாக வெளிப்படுத்தப்படுடல், அல்லது<br><br>(b) வருமானம் மற்றும் அருவச் சொத்தின் பொருளாதார நன்மைகளின் நுகர்வு ஆகியன அதிக தொடர்புடையதாக மெய்ப்பிக்கப்படும் போது. |
| 98B | பந்தி 98 இற்கு அமைவாக பொருத்தமான பெறுமதியிழப்பைத் தெரிவு செய்யும் பொழுது, உரிமமானது அருவச் சொத்துக்களுடன் உள்ளார்ந்த முதன்மையான காரணி வரம்புகளை தீர்மானிக்கலாம். உதாரணமாக, ஒரு அருவச்சொத்தின் மீதான உரிமத்தின் பாவனை அமைக்கும் ஒப்பந்தம், அவ்வுரிமத்தின் அருவச்சொத்தின் பாவனையை முன்னரே தீர்மானிக்கப்பட்ட வருட எண்ணிக்கை (அதாவது காலம்) உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை அல்லது உருவாக்கக்கூடிய வருமானத்தின் நிர்ணயித்த மொத்த எண்ணிக்கையில் வரையறுக்கலாம். குறிப்பிட்ட முதன்மையான காரணி வரம்பின் அடையாளம் காணலானது, பொருத்தமான பெறுமதியிழப்பின் அடிப்படையை அடையாளம் காணும் ஆரம்ப மையமாக சேவை செய்ய முடியும். ஆனால், அது எதிர்ப்பார்க்கப்பட்ட பொருளியல் நன்மைகளின் நுகர்வை, மிக அருகாமையில் வெளிப்படுத்தப்படும் போது வேறு அடிப்படையாக பிரயோகிக்கப்படலாம். |
| 98C | முதன்மையான காரணி வரம்பு, அது அருவச்சொத்தின் வருமானத்தின் அளவை அடைவதற்கு உள்ளார்ந்ததாக காணப்படும் சூழ்நிலைகளில், உருவாக்கப்படக்கூடிய வருமானமானது பெறுமதியிழப்பிற்குப் பொருத்தமான முறையாகும். உதாரணமாக, ஒரு உரிமமானது தங்க சுரங்க அகழ்வுக்கான சலுகைகளை கையகப்படுத்தலாம். ஒப்பந்தத்தின் காலாவதியானது தங்க அகழ்வின் காலம் அல்லது அளவினை அடிப்படையாக கொள்ளாமல் அகழ்வுகளில் உருவாக்கப்படும் மொத்த வருமானத்தின் நிலையான தொகையை அடிப்படையாக கொள்ளலாம். (உதாரணமாக ஒரு ஒப்பந்தம் தங்க விற்பனையின் மொத்த வருமானம் 2 பில்லியன் ரூபாய்களை அடையும் வரை அகழ்வினை அனுமதிக்கலாம்). மற்றொரு உதாரணமாக, கட்டணம் வசூலிக்கப்படும் வீதியை தொழிற்படுத்துவதற்கான உரிமையானது விதிக்கப்பட்ட மொத்தக் கட்டணத்தில் உருவாக்கப்பட்ட நிலையான மொத்த வருமானத்தை அடிப்படையாக கொள்ளலாம். (உதாரணமாக, ஒப்பந்தமானது கட்டண வீதியை தொழிற்படுத்தும் அனுமதியை அந்த பாதையை தொழிற்படுவதனால் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம் 100 மில்லியன்களை அடையும் வரை வழங்கலாம்). வருமானம் முதன்மையான வரையறுக்கப்பட்ட காரணியாக உருவாக்கப்பட்ட வழக்கில் அருவச்சொத்தை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தமானது அருவச்சொத்தை பெறுமதியிழப்பு செய்ய, ஒப்பந்தம் உருவாக்கப்படக்கூடிய வருமானத் தொகையின் மீது பெறுமதியிழப்பு தீர்மானிக்கப்படுவதைத் தீர்மானிக்கும் அடிப்படைய வருமானத் தொகை விவரிக்கும் பொழுது பொருத்தமானதாக இருக்கலாம். |
| 130J | *தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்பிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறைகளின் விளக்கமளிப்பு* (LKAS16 மற்றும் LKAS 38 இற்கு திருத்தங்கள்) 2016, பெப்புருவரியில் வழங்கப்பட்டது, பந்திகள் |

| | |
|---|---|
| | 92 மற்றும் 98 திருத்தப்பட்டதுடன், பந்திகள் 98A-98C சேர்க்கப்பட்டது. உரிமமானது அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

## LKAS 39 - நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு

| | |
|---|---|
| 88 | (நீக்கப்பட்டுள்ளது) |

## LKAS 40 - முதலீட்டு ஆதனம்

| | |
|---|---|
| 4(a) | உயிரியல் சொத்துக்கள் விவசாய செயற்பாடுகளுடன் தொடர்புடையது. (LKAS 41 விவசாயம் மற்றும் LKAS 16 *ஆதனம், பொறி மற்றும் உபகரணம்* நியமத்தைப் பார்க்கவும்); அத்துடன் |
| 7 | முதலீட்டு ஆதனமானது வாடகை உழைப்பதற்கு அல்லது மூலதன உயர்விற்காக அல்லது, இரண்டிற்கும் வைத்திருப்பதாகும். ஆதலால் முதலீட்டு ஆதனமானது காசுப்பாய்வுகளை ஒரு உரிமத்தால் வைத்திருக்கப்படும் ஏனைய சொத்துக்களில் இருந்து பெருமளவு சுயாதீனமாக உருவாக்குகின்றது. இது முதலீட்டு ஆதனத்தை உரிமையாளர் குடியிருக்கும் ஆதனத்திடம் இருந்து வேறுபடுத்துகின்றது. உற்பத்தி அல்லது பொருட்கள் அல்லது சேவை விநியோகம் (அல்லது நிர்வாக தேவைக்காக பயன்படுத்தும் சொத்து) காசுப்பாய்வை உருவாக்குகின்றது. அது ஆதனத்திற்கு மட்டும் அல்லாது உற்பத்தி அல்லது சேவை செயற்பாடுகளிற்கு பயன்படுத்தும் ஏனைய சொத்துக்களிற்கும் உடமையாக கருதப்படுகின்றது. |

## LKAS 41 - விவசாயம்

| | |
|---|---|
| 1(a) | தாங்குபயிர்கள் தவிர்ந்த **உயிரியல் சொத்துக்கள்**. |
| 2(b) | தாங்குபயிர்கள் தொடர்புடைய விவசாய செயற்பாடுகள் (LKAS16 ஐப் பார்க்க). ஆனால் இந்த நியமமானது அந்த தாங்குபயிர்களின் விளைச்சல்களுக்கு பிரயோகிக்கக் கூடியது. |
| 2(c) | தாங்குபயிர்களுடன் தொடர்புடைய அரசாங்க கொடைகள் (LKAS20 அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்) |
| 3 | இந்த நியமமானது விவசாய விளைச்சல்களிற்கு பிரயோகிக்கப்படும், அவையாவன அறுவடையாகும் பொழுதில், உயிரியல் சொத்தின் அறுவடை செய்யப்பட்ட விளைச்சல்கள். அக்கணத்திலிருந்து LKAS 02 *இருப்புக்கள்* அல்லது வேறு பொருத்தக்கூடிய நியமம் பிரயோகிக்கப்படும். அதற்கிணங்க அறுவடைக்கு பின்னரான விவசாய விளைச்சல்களின் செயன்முறைகளை இந்த நியமம் கையாளவில்லை. உதாரணம்: திராட்சையை வளர்த்து மது தயாரிப்பவரால் திராட்சையானது வைன் ஆக செயற்படுத்தல். ஆயினும், குறிப்பிட்ட நிலைமாற்றம் ஆனது இயற்கையான விவசாய செயற்பாடுகளின் விரிவாக்கமாயினும் மற்றும் இடம்பெறும் செயற்பாடுகள் உயிரியல் உருமாற்றத்துடன் ஒன்றானவையாக இருப்பினும், குறிப்பிட்ட நிலைமாற்றம் இந்த நியமத்தின் படி விவசாய செயற்பாடுகளின் சொற்பொருள் விளக்கத்தினுள் உள்ளடங்காது. |
| 4 | கீழ்வரும் அட்டவணையானது உயிரியல் சொத்துக்கள், விவசாய விளைச்சல்கள், மற்றும் அறுவடைக்குப் பின்னரான நிலைமாற்றத்தின் விளைவான பொருட்கள் என்பவற்றின் உதாரணங்களை வழங்குகின்றது. |

| உயிரியல் சொத்துக்கள் | விவசாய உற்பத்திகள் | அறுவடைக்குப் பின்னரான நிலைமாற்றத்தின் விளைவான பொருட்கள் |
|---|---|---|
| செம்மறியாடு | உரோமம் | நூல், கம்பளம் |

| | | |
|---|---|---|
| பலகைமரத் தோட்டத்தில் உள்ள மரங்கள் | விழுந்த மரங்கள் | மரத்துண்டு, பலகை |
| பால்தரும் கால்நடை | பால் | பாலாடைக்கட்டி |
| பன்றிகள் | இறந்த விலங்கின் உடல் | பதப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி |
| பருத்திச் செடிகள் | அறுவடை செய்த பருத்தி | நூல், துணி |
| கரும்பு | அறுவடை செய்த கரும்பு | சீனி |
| புகையிலை செடிகள் | பறிக்கப்பட்ட இலைகள் | பதப்படுத்திய புகையிலை |
| தேநீர் புதர்கள் | பறிக்கப்பட்ட இலைகள் | தேயிலை |
| திராட்சை கொடிகள் | பறிக்கப்பட்ட திராட்சைகள் | வைன்பானம் |
| பழ மரங்கள் | பறிக்கப்பட்ட பழங்கள் | பதப்படுத்தப்பட்ட பழங்கள் |
| எண்ணெய் தழைகள் | பறிக்கப்பட்ட பழங்கள் | மரக்கறி எண்ணெய் |
| இறப்பர் மரங்கள் | அறுவடை செய்த மரப்பால் | இறப்பர் உற்பத்திகள் |

சில செடிகள், உதாரணமாக, தேயிலைப் புதர்கள், திராட்சைக் கொடிகள், எண்ணெய்த் தழைகள் மற்றும் இறப்பர் மரங்கள் பொதுவாக தாங்குபயிரிற்கான வரைவிலக்கணத்தை திருப்தி செய்வதுடன், LKAS 16 இன் நோக்கெல்லையினுள் உள்ளடங்கும். ஆனால், தாங்குபயிர்கள் மீது வளரும் விளைச்சல்கள். உதாரணமாக, LKAS 41 இன் நோக்கெல்லைக்குட்பட்டவை. உதாரணமாக, தேயிலை இலைகள், திராட்சை, எண்ணெய்த் தழைகள் மற்றும் மரப்பால்

**கீழ்வரும் பதங்கள் அங்கு விபரித்த அர்த்தங்களுடன் இந்த நியமத்தில் பாவிக்கப்படும்:**

**விவசாய செயற்பாடு என்பது உயிரியல் சொத்துக்களை விற்பனைக்காக அல்லது விவசாய விளைச்சலுக்காக அல்லது மேலதிக உயிர்ச் சொத்துக்களாக மாற்றும் உற்பத்தி செயற்பாட்டின் உரிமமொன்றின் முகாமை.**

**விவசாய உற்பத்தி என்பது, உரிமமொன்றினால் அதன் உயிரியல் சொத்துக்களிலிருந்து பெறும் அறுவடை தயாரிப்பு அல்லது பொருள் ஆகும்.**

**தாங்குபயிரானது ஒரு வாழும் பயிராகும் அது:**

**a) விவசாய விளைச்சல்களின் உற்பத்தி அல்லது வளங்களிற்கு பயன்படுத்தப்படும்;**

**b) ஒன்றுக்கு மேற்பட்ட காலத்திற்கு தாங்குபயிர் விளைச்சல்களிற்கு எதிர்பார்க்கப்படும்,**

**c) சந்தர்ப்பவசமான விற்பனை தவிர, விவசாய விளைச்சல்களை விற்பனை செய்வதற்கான மிக குறைவான வாய்ப்பை கொண்டது.**

**உயிரியல் சொத்து என்பது உயிர்ப்பிராணி அல்லது தாவரம் ஆகும்.**

**உயிரியல் பொருளாக உருமாறுபாடு என்பது ஒரு உயிரியற் சொத்தில் எண்ணிக்கை அல்லது தர மாற்றத்தை உருவாக்கும் ஒரு இன வளர்ச்சி சிதைவு, உற்பத்தி மற்றும் பெருக்கச் செயற்பாடுகளை உள்ளடக்கியது.**

**விற்பனைக் கிரயம் என்பது, ஒரு சொத்தை விற்பனை செய்வதுடன் நேரடியாக தொடர்புப்பட்ட அதிகரிக்கும் கிரயங்கள், ஆனால் நிதிக் கிரயத்தையும் வரிச் செலவையும் உள்ளடக்குவதில்லை.**

**உயிர்ச் சொத்துக்கள் குழுமம் என்பது ஒரே வகையான வாழும் பிராணிகள் அல்லது தாவரங்களின் கூட்டு மொத்தம் ஆகும்.**

**அறுவடை என்பது உயிர்ச்சொத்து ஒன்றில் இருந்து விளைச்சலை அறுவடை செய்யும் அல்லது உயிர்ச்சொத்தொன்றின் வாழ்வை முடிவுக்கு கொண்டுவரும் செயற்பாடு ஆகும்.**

**5A** கீழ்வருவன தாங்குபயிர்கள் அல்ல:

(a) விவசாய விளைச்சல்களாக அறுவடை செய்யப்படும் செடிகள் (உதாரணம், பலகையாக பயன்படுத்துவதற்கு வளர்க்கப்பட்ட மரங்கள்).

(b) சந்தர்ப்பவசமான விற்பனை தவிர்ந்த உரிமம் அறுவடை செய்து விவசாய விளைச்சல்களாக விற்பனை செய்யும் வாய்ப்பு அரிதானதை விட இருக்கும் பொழுது அறுவடை பயிர்களாக அறுவடை செய்ய விவசாயம் செய்யும் செடிகள். (உதாரணம்; பழங்கள் மற்றும் பலகைக்காக

| | |
|---|---|
| | விவசாயம் செய்யும் மரங்கள்)<br>(c) வருடாந்த பயிர்கள் (உதாரணம்: சோளம் மற்றும் கோதுமை) |
| **5B** | தாங்குபயிர்கள் உற்பத்தியை தாங்கிக் கொள்ள இனிமேல் பயன்படுத்த முடியாத போது, அவைகள் வெட்டப்பட்டு கழிவுகளாக விற்கப்படலாம். உதாரணம்; விறகுகளாக பயன்படுத்தல். குறிப்பிட்ட எதிர்பாராத மீத விற்பனையானது அந்த செடியை தாங்குபயிர் இன் வரைவிலக்கணத்தை திருப்திபடுத்துவதை விலக்களிக்காது. |
| **5C** | தாங்குபயிர் மீது வளர்ந்த விளைச்சல்கள் ஒரு உயிரியல் சொத்தாக கருதப்படும். |
| **8** | **[நீக்கப்பட்டது]** |
| **24(a)** | ஆரம்ப செலவு இடம்பெற்ற பொழுதில் இருந்து சிறிய உயிரியல் நிலைமாற்றம் ஏற்பட்டுள்ளது (உதாரணம்: அறிக்கையிடும் காலத்தின் இறுதிக்கு மிக அண்மையில் விதைக்கப்பட்ட விதைகள் அல்லது புதிதாக சுவீகரிக்கப்பட்ட கால்நடைகள்) அல்லது |
| **44** | நுகரப்படக்கூடிய உயிரியல் சொத்துக்களாவன, விவசாய விளைச்சல்களாக அறுவடை செய்யக்கூடியது அல்லது உயிரியல் சொத்துக்களாக விற்பனை செய்யப்படக் கூடியவை ஆகும். உதாரணம்: இறைச்சி உற்பத்திக்காக பயன்படுத்தக் கூடிய உயிர்ச்சொத்துக்கள், விற்பனைக்காக வைத்திருக்கும் உயிர்ச்சொத்துக்கள், பண்ணையிலுள்ள மீன்கள், சோளம், கோதுமை போன்ற பயிர்கள், தாங்குபயிர் மீதான விளைச்சல்கள், மற்றும் வெட்டுவதற்காக வளர்க்கப்படுகின்ற மரங்கள். நுகரக்கூடிய உயிரியல் சொத்துகள் தவிர்ந்தவை தாங்கு உயிரியல் சொத்துகள் ஆகும். உதாரணம்: பால் உற்பத்தி பெறும் கால்நடை மற்றும பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பழ மரங்கள். தாங்கு உயிரியல் சொத்துகள் விவசாய விளைச்சல்கள் அல்ல, மாறாக அவை உற்பத்திகாக வைத்திருப்பவை. |
| **62** | விவசாயம்: தாங்குபயிர்கள் (LKAS41 மற்றும் LKAS16 இற்கான திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்திகள் 1-5,8, 24 மற்றும் 44 திருத்தப்பட்டது. பந்திகள் 63 மற்றும் 5A-5C சேர்க்கப்பட்டது. உரிமம் ஒன்று அந்த திருத்தங்களை 2016, சனவரி 01ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். ஒரு உரிமம் இந்த திருத்தங்களை LKAS08 இற்கு அமைவாக பின்னோக்கிய காலத்திற்கு பிரயோகிக்கலாம். |
| **63** | அறிக்கையிடும் காலத்தில் விவசாயம் எப்போது தாங்குபயிர்கள் (LKAS 41 மற்றும் LKAS 14 இற்கு திருத்தங்கள்) முதலில் பிரயோகிக்கும் பொழுது ஒரு உரிமம் LKAS 08 இன் 28(F) இல் வேண்டிய எண்ணிக்கையிலான தகவல்களை நடைமுறை காலத்திற்கு வெளிப்படுத்தத் தேவையில்லை. ஆயினும் ஒரு உரிமம் LKAS 08 இற்கு 28(F) இற்கு பந்திகளிற்கு அமைவாக எண்ணிக்கையிலான தகவல்களை முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு காலத்திற்கும் முன்னிலைப்படுத்தும். |

## SLFRS 1-இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் முதன்முறைப் பின்பற்றுகை

| | |
|---|---|
| 39V | SLFRS 14 ஒழுங்குவிதிமுறைசார் பிற்போடப்பட்ட கணக்குகள் 2014, யூன் இல் வழங்கப்பட்டது. உரிமம் இத் திருத்தங்களை 2016, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். பந்தி D8B திருத்தப்பட்டுள்ளது. முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் SLFRS 14 ஐ முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கும் பட்சத்தில், இத் திருத்தங்களை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கலாம். |
| 39W | *கூட்டுத் தொழில் முயற்சிகள் மீதான நாட்டத்தின் கையகப்படுத்தலுக்கான கணக்கீடு* (SLFRS 11 இற்கு திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. C5 பந்தி திருத்தப்பட்டுள்ளது. ஒரு உரிமமானது அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். உரிமமானது SLFRS 11 இற்கு தொடர்புடைய திருத்தங்களை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கும் பொழுது பந்தி C5 இற்கான திருத்தத்தை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கும். |

| | |
|---|---|
| 39Z | *வேறான நிதிக்கூற்றுக்களில் உள்ள உரிமையாண்மை முறை* (LKAS27 இற்கான திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்தி D14 திருத்தியும் பந்தி D15A சேர்க்கப்பட்டும் உள்ளது. உரிமம் அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்த திருத்தங்களை முன்னைய காலத்திற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| 39AA | IASB இன் வருடாந்த மேம்பாடுகள் 2014-2015 சுழற்சியின் பின்பற்றுகை 2014, செத்தெம்பரில் வழங்கப்பட்டது. E4A பந்தி சேர்க்கப்பட்டுள்ளது. உரிமம் அந்த திருத்தத்தை 01 சனவரி, 2016 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| C5 | கடந்த வியாபார இணைப்புக்களிற்கான விலக்கல்கள் துணைநிலை நிறுவனங்களின் கடந்த கையகப்படுத்தல்கள், கூட்டு முயற்சியிலான நாட்டம் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலான நாட்டம், அதில் கூட்டுத்தொழிற்பாடு செயற்பாடானது SLFRS 03 இன் வரைவிலக்கணத்தின் படி வர்த்தகமாக அமைகிறது. மேலும் பந்தி C1இற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட திகதி குறிப்பிட்ட அனைத்து கையகப்படுத்தல்களிலும் சமமாக பிரயோகிக்கப்படும். |
| D8B | சில உரிமங்கள் பயன்படுத்திய அல்லது முன்னர் பயன்படுத்தப்பட்ட விகிதக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட தொழிற்பாட்டில் உள்ள பொறி, உபகரணம் மற்றும் ஆதனங்களை வைத்திருக்கும். குறிப்பிட்ட உருப்படிகளானது முன்கொண்டு செல்லப்படும் தொகையானது முன்னை GAAP யின் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகைகள் ஆனால் SLFRS ற்கு அமைவாக முதலீட்டாக்கத்திற்கு தகுதியற்ற உருப்படிகளை உள்ளடக்கலாம். அப்படியாயின் முதற் தடைவ பின்பற்றுவோர் குறிப்பிட்ட உருப்படியின் நிலைமாற்ற திகதியில் முன்னைய GAAP முன்கொண்டுவந்த தொகையை கருதப்படும் கிரயமாக பயன்படுத்த தேர்வு செய்யலாம். ஒரு உரிமம் இந்த விலக்கை ஒரு உரிமத்திற்கு பிரயோகிக்கும் பொழுது அனைத்து உருப்படிகளிற்கும் பிரயோகிக்க தேவை இல்லை. SLFRS இற்கு நிலைமாறும் திகதியில் ஒரு உரிமம் இந்த விலக்கல் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு உருப்படிகளிற்கும் LKAS 36 இற்கு அமைவாக சேத இழப்பை பரீட்சிக்க வேண்டும். அவை பொருட்கள் அல்லது சேவைகளுக்கு வாடிக்கையாளர்களிற்கு விதிக்கக்கூடிய விலைகளை நிர்வகிக்கும் ஒரு வேலைச்சட்டகத்தினால் ஆளுகை செய்யப்பட்டு, மற்றும் அந்த வேலைச்சட்டகமானது வீத கட்டுப்பாட்டாளரின் மேற்பார்வை மற்றும் / அங்கீகாரத்திற்கு உட்பட்டு இருப்பின், (SLFRS 14 *பிற்போடப்பட்ட கணக்குகளின்* படி வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு) இந்த பந்தியின் நோக்கத்திற்காக செயற்பாடுகள் வீத ஒழுங்குமுறைகளிலிருந்து உட்படும். |
| D14(c) | LKAS 28 இல் விளக்கப்பட்ட உரிமையாண்மை முறையை பயன்படுத்தல். |
| D15A | LKAS 28 இல் விளக்கப்பட்டவாறு ஒரு முதற்தடவை பிரயோகிப்பவர் உரிமையாண்மை முறை செயற்பாடுகளை பயன்படுத்தி குறிப்பிட்ட முதலீட்டை கணக்கீடு செய்யும் போது:<br>(a) முதற்தடவை பிரயோகிப்பவர், விலக்களிப்புக்களை கடந்த வியாபார இணைப்புகளிற்கு முதலீட்டு கையகப்படுத்தல்களுக்குப் பிரயோகிப்பார் (பிற்சேர்க்கை C)<br>(b) ஒரு உரிமம் அதன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுகளிற்கு முன்னரான அதன் வேறான நிதிக்கூற்றுக்களிற்கு முதல் தடவை பிரயோகிப்பவராக ஆகும் போது, மற்றும்<br>(i) அதன் முதனிலை உரிமத்தின் பின்னரை விட உரிமம் பந்தி D 16 ஐ அதன் வேறான நிதிக்கூற்றுக்களிற்கு பிரயோகிக்கும்.<br>(ii) உரிமமானது பந்தி D 17 ஐ அதன் வேறான நிதிக்கூற்றுக்களில் அதன் கீழ்நிலை உரிமத்திற்கு பின்னர் பிரயோகிக்கும். |
| **E4A** | முதற்தடவை பிரயோகிப்பவர் SLFRS 7 இல் பந்தி 44AAஇல் உள்ள மாற்றிடைக்கால ஏற்பாடுகளை பிரயோகிக்கலாம். |

## SLFRS 2- பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு

மாற்றம் இல்லை

## SLFRS 3- வியாபார இணைப்புக்கள்

மாற்றம் இல்லை

## SLFRS 4- காப்புறுதி ஒப்பந்தங்கள்

மாற்றம் இல்லை

## SLFRS 5- விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள்

| தலைப்பு | **விற்பனை திட்டத்தில் அல்லது உரிமையாளர்களுக்கு பங்கீடு செய்யும் திட்டத்திலான மாற்றம்.** |
|---|---|
| 26 | உரிமமானது ஒரு சொத்தை (அல்லது விற்பனைக்குரிய தொகுதி) விற்பனைக்காக வைக்கப்பட்டதாக அல்லது உரிமையாளர்களிற்கு விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டதாக வகைப்படுத்தும் போது, ஆனால் பந்திகள் 7-9 இல் உள்ள விதிகளானது இனிமேல் திருப்தி செய்யப்படாத போது, (விற்பனைக்காக வைத்திருக்கப்படுவது அல்லது பந்தி 12A இன் படி உரிமையாளர்களிற்கு விநியோகிப்பதற்காக வைத்திருக்கப்படுவது). உரிமமானது அந்த சொத்தை (அல்லது விற்பனை தொகுதியை) விற்பனைக்காக வைத்திருக்கப்படுவது அல்லது உரிமையாளரின் விநியோகத்திற்கு வைத்திருக்கப்படுவது (முறையே) என வகைப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும். பந்தி 26A ஐ பிரயோகிக்கும் பொழுதை தவிர்த்து, இது போன்ற வழக்குகளில் இந்த மாற்றத்தை கணக்கீடு செய்ய பந்திகள் 27-29 இன் வழிக்காட்டல்களை பின்பற்றலாம். |
| 26A | உரிமமானது ஒரு சொத்தை (அல்லது விற்பனை தொகுதி) விற்பனைக்கு உரியதில் இருந்து உரிமையாளர்களின் விநியோகத்திற்கு அல்லது உரிமையாளர்களின் விநியோகித்தலில் இருந்து விற்பனைக்கு உரியதாக நேரடியாக மீள்வகைப்படுத்தும் போது அவ்வகைப்படுத்தலின் உள்ள மாற்றமானது அசல் அகற்றும் திட்டத்தின் தொடர்ச்சியாக கருதப்படும். உரிமம்;<br><br>(a) இந்த மாற்றத்தை கணக்கீடு செய்ய பந்திகள் 27-29 இன் வழிக்காட்டல்களை பின்பற்றாது. உரிமமானது வகைப்படுத்தல், முன்னிலைப்படுத்தல், ஏற்பிசைவுகளின் இந்த SLFRS இன் விற்பனைக்கான புதிய முறைக்கு பயன்படுத்தக்கூடியவற்றை பிரயோகிக்கும்.<br><br>(b) நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஏற்பிசைவை (அல்லது விற்பனைத்தொகுதி) பந்தி 15 இன் தேவைகளை பின்பற்றி (விற்பனைக்குரியதாக மீள் வகைப்படுத்தும் போது) அல்லது 15A (உரிமையாளரின் விநியோகத்திற்கு வைத்திருப்பதாக மீள் வகைப்படுத்தப்படும் போது) மற்றும் பந்திகள் 20-25 இற்கான தேவைகளை பின்பற்றி சீர்மதிப்பிலிருந்து விற்பனை கிரயத்தை கழிக்க வரும் தொகையில் உள்ள குறைவு அல்லது அதிகரிப்பு ஏதும் இருப்பின் அடையாளப்படுத்தும்.<br><br>(c) பந்திகள் 08 மற்றும் 12A இற்கு அமைவாக மீள் வகைப்படுத்தும் விதியை மாற்றாது. இது பந்தி 09 இல் உள்ள நிலைமைகள் சந்திக்காத பொழுது, விற்பனை அல்லது உரிமையாளர்களின் விநியோகத்திற்குள் முடிவுறுத்த தேவையான காலத்தின் நீடிப்பை விலக்காது. |
| 27 | உரிமமானது நடைமுறை அல்லா சொத்தை (அல்லது விற்பனை தொகுதி) விற்பனைக்குறியதாக அல்லது உரிமையாளர்களின் விநியோகத்திற்கு உரியதாக வகைப்படுத்தலை முடிவுறுத்தும் பொழுது (விற்பனை தொகுதியாக உள்ளடங்க கூடியதை அல்லது உரிமையாளரின் விநியோகத்திற்கு வைத்திருப்பதற்குள் உள்ளடங்குவதை |

| | |
|---|---|
| | முடிவுறுத்தும் போது) குறைந்தவற்றில்:<br>(a) சொத்தானது விற்பனைக்குரியதாக அல்லது உரிமையாளரின் விநியோகத்திற்கு உரியதாக வகைப்படுத்தப்பட முன்னர் அதன் முற்கொணர்ந்த பெறுமதியில், ஏதேனும் சரி செய்யப்பட்டத் தேய்மானம், காலத்தேய்மானம் அல்லது அச்சொத்தானது விற்பனைக்குரியதாக அல்லது விநியோகத்திற்கு உரியதாக வகைப்படுத்த முன் அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பீடுகள் மற்றும்<br>(b) விற்பனைக்கல்லாத, அல்லது விநியோகத்திற்கு அற்றதாக பிற்பட்ட தீர்மானத்திகதியில் அதன் மீளப்பெறத்தகு தொகை. |
| 28 | உரிமமானது, விற்பனைக்கு வைத்திருப்பது அல்லது உரிமையாளர்க்கு இலாபம் அல்லது நட்டமாக அதன் தொடரும் செயற்பாடுகளிற்கு உரியகாலம் அதில் பந்திகள் 07-09 அல்லது 12A முறையே அடிப்படை சந்திக்காத பொழுது, நிலையான சொத்தின் முற்கொணர்ந்த தொகைக்கு தேவையான செம்மையாக்கங்களை உள்ளடக்கும். விற்பனைக்குரிய தொகுதி அல்லது நிலையான சொத்துக்களானது விற்பனைக்கு வைத்திருப்பது அல்லது கீழ்நிலை உரிமம் கூட்டுத்தொழில் முயற்சி துணைநிலை நிறுவனம் அல்லது கூட்டுத்தொழில் முயற்சியின் பகுதியின் ஆர்வம் ஆகியவற்றின் உரிமையாளர்களிற்கு விநியோகத்திற்கு வைத்திருப்பதாக வகைப்படுத்துதல் முடிவடையும் பொழுது விற்பனைக்கு வைத்திருப்பது அல்லது விநியோகத்திற்கு வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து நிதிக்கூற்றுகளிற்கு அதற்கிணங்க திருத்தப்படும். உரிமமானது அந்த செம்மையாக்கங்களை பந்தி 37 இற்கு அமைவாக இலாபம் அல்லது நட்டம் அங்கீகரிக்கப்பட்ட முழுமையான வருமானத்தின் அதே தலைப்பின் கீழ் அந்த செம்மையாக்கங்களை வழங்கலாம். |
| 29 | உரிமமானது விற்பனைக்குரிய தொகுதி விற்பனைக்கு வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்ட விற்பனைத் தொகுதியில் இருந்து ஒரு தனிப்பட்ட சொத்து அல்லது பரிப்பை அகற்றுமாயின் எஞ்சியுள்ள விற்பனைக்குரியதாக வைத்திருக்கும் தொகுதியின் உள்ள சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் குறிப்பிட்ட தொகுதி பந்தி 07-09 இல் உள்ள அடிப்படைகளை சந்திக்கும் போது மாத்திரமே அவை தொடர்ந்து தொகுதியாக கருதுப்படும். உரிமமானது விற்பனைக்குரிய தொகுதி உரிமையாளர்களின் விநியோகிப்பதற்காக வைத்திருக்கும் பொழுது ஒரு தனிப்பட்ட சொத்து அல்லது பரிப்பை அகற்றுமாயின் எஞ்சியுள்ள விநியோகத்திற்கு வைத்திருக்கும் விற்பனை தொகுதியில் உள்ள சொத்துக்கள்அல்லது பரிப்புகளை பந்தி 12A இன் அடிப்படைகளை சந்திக்கும் பொழுது மாத்திரமே தொடர்ச்சியாக ஒரு குழுமமாக அளவிடப்படும். மற்றபடி எஞ்சியுள்ள குழுமத்தின் நிலையான சொத்துகள் தனித்தனியாக விற்பனைக்காக வைத்திருக்கும் சொத்தின் அடிப்படைகளை சந்திக்கும் பொழுது அதன் முற்கொணர்ந்த தொகை மற்றும் சீர்மதிப்பு பெறுமதியில் விற்பனை கிரயத்தை கழிக்க வரும் தொகையில் (விநியோகிப்பதற்கான கிரயம்) குறைந்ததில் தனித்தனியாக அந்த தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். உரிமையாளர்களுக்கு விற்பனைக்காக வைத்திருக்கும் அடிப்படைகளை சந்திக்காத நிலையான சொத்துக்கள் ஏதும் இருப்பின் பந்தி 26 இற்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தல் நிறுத்தப்படும். |
| 44L | *IASB இன் வருடாந்த திருத்தங்கள் சுவீகரிப்பு* 2012-2014 சுழற்சி 2014, செத்தெம்பரில் வழங்கப்பட்டது. பந்திகள் 26-29 திருத்தப்பட்டுள்ளது. மற்றும் பந்தி 26A சேர்த்தும் உள்ளது. உரிமமானது அந்த திருத்தங்களை LKAS 08 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களிற்கு 2016, சனவரி 01 அல்லது அதற்குப்பின்னர் விற்பனை முறையில் ஏற்பட்ட மாற்றங்களை எதிர்கால பிரயோகத்தை மேற்கொள்ளும்.முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

## SLFRS 6- கனிப்பொருள் வளங்களின் அகழ்வு மற்றும் மதிப்பாய்வும்

மாற்றம் இல்லை

## SLFRS 7- நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள்- பிண்ணினைப்பு B

| | |
|---|---|
| 21 | உரிமமானது LKAS 1 *நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்* இன் பந்தி 117 இற்கு அமைவாக நிதியறிக்கைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அளவீட்டு அடிப்படைகளை உள்ளடக்கிய அதன் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுகளின் புரிந்துணர்வுக்கு தொடர்புடைய ஏனைய கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தும். |
| 44R | *வெளிப்படுத்தல்கள் நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பரிப்புக்கள் ஈடுசெய்தல்* (SLFRS 07 இற்கு திருத்தங்கள்) 2014 இல் வழங்கப்பட்டது. பந்திகள் 13A-13F மற்றும் B40-B53 திருத்தி உள்ளது.ஒரு உரிமம் அந்த திருத்தத்தை 01 சனவரி, 2014 அல்லது அதன்பின் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிற்கால விளைவுள்ள வகையில் பிரயோகிக்கும். |
| 44AA | IASB இன் வருடாந்த திருத்தங்கள் சுவீகரிப்பு 2012-2014 சுழற்சி 2014, செத்தெம்பரில் வழங்கப்பட்டது. பந்திகள் 44R மற்றும் B30 திருத்தப்பட்டுள்ள மற்றும் பந்தி B30A சேர்த்தும் உள்ளது. உரிமமானது அந்த திருத்தங்களை LKAS 08 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களிற்கு 2016, சனவரி 01 அல்லது அதற்குப்பின்னர் விற்பனை முறையில் ஏற்பட்ட மாற்றங்களிற்கு பின்நோக்கிய பிரயோகத்தை மேற்கொள்ளும். உரிமம் பந்திகள் B30 மறறும் B30A இன் திருத்தங்களை உரிமம் அந்த திருத்தங்களை முதலில் பிரயோகித்த காலத்திற்கு முன்னர் பிரயோகிக்க தேவை இல்லை. பந்திகள் 44R , B30 மறறும் B30A இன் திருத்தங்களின் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| 44BB | வெளிப்படுத்தல்கள் முயற்சி (LKAS01 இற்கு திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்திகள் 21 மற்றும் B5 திருத்தியுள்ளது. உரிமமொன்று அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| B5 | (g) நிதிச்சொத்தின் விதிமுறை இல்லையெனில் கடந்த மிகுதி அல்லது சேத இழப்பு மறுபரிசீலனை செய்து மறுபரிசீலனைக்கு உட்பட்ட நிதிச்சொத்துகளுக்கான கணக்கீட்டு கொள்கைகள்.<br><br>LKAS01 இன் பந்தி 122 மேலும் உரிமங்கள் அதனுடன் அதன் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் அல்லது ஏனைய குறிப்புக்களுடன் தீர்ப்புகள் முகாமையானது உரிமத்தின் கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செயற்பாட்டில் உருவாக்கிய மதிப்பீடுகள் உள்ளடங்கல்களை தவிர மற்றும் மிகக்கூடிய பொருண்மையான பாதிப்பை கொண்ட நிதியறிக்கைகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகைகளையும் வெளிப்படுத்த வேண்டுகிறது. |
| B30 | உரிமமானது பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக பரிமாற்றப்பட்ட நிதிச்சொத்தில் உள்ளடங்கிய கூட்டிணைவு உரிமைகள் அல்லது பரிப்புக்களின் ஒன்றை தக்க வைத்திருக்கும் போது அல்லது பரிமாற்றப்பட்ட நிதிச்சொத்து அல்லது பரிப்பிற்கு தொடர்புடைய புதிய கூட்டிணைவு உரிமைகள் அல்லது பரிப்புக்களை சுவீகரிப்பின் உரிமமானது பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்தின் மீது தொடர்ச்சியான ஈடுபாட்டை கொண்டிருக்காது. உரிமமானது பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்தின் எதிர்கால செயற்பாடுகளின் மீது ஆர்வத்தை கொண்டிருக்கும் பொழுது மற்றும் பரிமாற்றப்பட்ட நிதிச்சொத்தின் மீது எதிர்காலத்தில் ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டி சூழ்நிலையில் இல்லாத போது உரிமமானது பரிமாற்றப்பட்ட நிதிச்சொத்தின் மீது தொடர்ச்சியான உள்ளடக்கங்களை கொண்டிராது. கொடுப்பனவுகள் என்னும் பதம் இந்த சூழலில் உரிமம் சேகரித்த மற்றும் பரிமாற்றப்பட்டவருக்கும் அனுப்ப வேண்டிய காசுப்பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்தின் மீதான காசுப்பாய்வுகளை உள்ளடக்கும். |
| B30A | உரிமமானது நிதிச்சொத்தை பரிமாற்றும் பொழுது அந்த நிதிச்சொத்தின் சேவைக்கான உரிமையை அதில் உள்ளடக்கிய கட்டணத்துக்காக தக்கவைத்துக்கொள்ளும். உதாரணம்: சேவை ஒப்பந்தம். வெளிப்படுத்தல்களின் தேவைகளின் நோக்கத்திற்காக உரிமமானது பந்திகள் 42C மற்றும் B30 இன் வழிக்காட்டல்களுக்கு அமைவாக சேவை ஒப்பந்தத்தை அளவிடும். உதாரணம்: சேவைக்கட்டணமானது பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட காசுப்பாய்வுகளின் தொகை அல்லது நேரத்தின் மீது உள்ளடங்கிய போது சேவையாளர் பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்தின் மீது தொடர்ச்சியான ஆர்வத்தை கொண்டிருப்பார். இதைப்போல் பரிமாற்றம் செய்யப்பட்ட நிதிச்சொத்து செயற்படாத காரணத்தால் |

| | |
|---|---|
| | நிச்சயித்த கட்டணம் முழுதாக கொடுப்பனவு செய்யப்படாத போது ஒரு சேவையாளர் வெளிப்படுத்தல்களின் தேவைகளின் காரணத்தினால் தொடர்ச்சியான ஆர்வத்தை கொண்டிருப்பார். இந்த உதாரணங்களில் பரிமாற்றப்பட்ட நிதிச்சொத்துக்களின் எதிர்கால செயற்பாடுகளில் சேவை வழங்குனர் ஆர்வத்தைக் கொண்டுள்ளார். சேவையை வழங்குவதற்கு உரிமையால் போதுமானதாக ஈடுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றதில் பெறக்கூடிய கட்டணத்தில் இருந்து இந்த மதிப்பீடு சுயாதீனமானது. |

## SLFRS 8- தொழிற்பாட்டுப் பிரிவுகள்

மாற்றம் இல்லை

## SLFRS 10- ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

| | |
|---|---|
| **4 (a) (iv)** | அதன் இறுதி அல்லது ஏதேனும் இடைநிலை முதனிலை உரிமம் SLFRS உடன் உடன்பட்ட பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உள்ள நிதிக்கூற்றுகளை தயாரிக்கும், அதில் கீழ்நிலை உரிமங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அல்லது இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படும். |
| **4 (b)** | **(நீக்கப்பட்டுள்ளது)** |
| **4 (c)** | **(நீக்கப்பட்டுள்ளது)** |
| **4A** | இந்த கணக்கீட்டு நியமமானது LKAS 19 *ஊழியர் பயன்கள்* பிரயோகிக்கக்கூடிய இளைப்பாறிய ஊழியர் பயன் திட்டங்கள் அல்லது நீண்டகால ஊழியர் பயன் திட்டங்களிற்கு பிரயோகிக்கப்படமாட்டாது. |
| **4B** | ஒரு முதனிலை உரிமம் அது முதலீட்டு உரிமம் ஆயின், இந்த இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பந்தி 31 இற்கு அமைவாக அதன் அனைத்து கீழ்நிலை உரிமங்களையும் இலாபம் அல்லது நட்ட சீர்மதிப்பு பெறுமதியினை அளவிடத் தேவைப்படும் போது அவ் உரிமம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. |
| **32** | பந்தி 31 இன் தேவை இருந்த போதிலும் ஒரு முதலீட்டு உரிமத்தின் கீழ்நிலை உரிமம், அது ஒரு முதலீட்டு உரிமம் அற்ற போதிலும் மற்றும் அதனுடைய முக்கிய நோக்கம் அல்லது செயற்பாடுகள் முதலீட்டு உரிமத்தின் முதலீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய போது (பந்திகள் B85C-B85E ஐ பார்க்கவும்) அது இந்த நியமத்தின் பந்திகள் 19-26 ற்கு அமைவாக அந்த கீழ்நிலை உரிமமானது கூட்டிணைக்கப்படும் மற்றும் ஏதேனும் ஒரு துணைநிலை உரிமத்தின் சுவீகரிப்பின் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் தேவைகள் பிரயோகிக்கப்படும். |
| **B85C** | ஒரு முதநிலை உரிமம் நேரடியாகவோ அல்லது கீழ்நிலை உரிமத்தின் ஊடாகவோ வேறு தரப்பினர் மற்றும் அதன் முதலீட்டாளர்களிற்கு முதலீட்டு தொடர்பான சேவைகளை வழங்கலாம். (உதாரணம்: முதலீட்டு ஆலோசனை சேவைகள், முதலீட்டு முகாமைத்துவம், முதலீட்டு ஆதரவு, மற்றும் நிறுவாக செயற்பாடுகள்) குறிப்பிட்ட செயற்பாடுகள் ஆயினும் உரிமமானது தொடர்ச்சியாக முதலீட்டு உரிமத்தின் வரைவிலக்கணத்தை திருப்தி செய்யும் பொருளிற்கிணங்க முதலீட்டு சேவைகளை வழங்கலாம். |
| **B85E** | ஒரு முதலீட்டு உரிமம் கீழ்நிலை உரிமத்தை கொண்டிருக்கும் போது அது ஒரு முதலீட்டு உரிமம் அற்ற போதும் மற்றும் அதன் முக்கிய நோக்கம் மற்றும் செயற்பாடுகள் முதலீடு தொடர்புடைய சேவை வழங்களுடன் அல்லது முதலீட்டு உரிமத்தின் முதலீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய போது பந்திகள் B85C-B85D இல் விவரிக்கப்பட்டவை போன்றவை. அது அந்த கீழ்நிலை உரிமத்தை பந்தி 32 இற்கு அமைவாக கூட்டிணைக்கலாம். கீழ்நிலை உரிமம் முதலீடு தொடர்புடைய சேவைகள் அல்லது செயற்பாடுகளை வழங்கும் போதும் அது முதலீட்டு உரிமம் ஆகும் போதும் அந்த முதலீட்டு உரிமத்தின் தாய் நிறுவனம் அதன் கீழ்நிலை உரிமங்களை பந்தி 31 இற்கு அமைவாக இலாபம் அல்லது நட்டத்தின் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடும். |

| | |
|---|---|
| **C1D** | முதலீட்டு உரிமங்கள் கூட்டிணைவு விதிவிலக்கை பிரயோகிக்கும் (SLFRS 10, SLFRS 12 மற்றும் LKAS 28 ற்கு திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்திகள் 4, 32, B85C, B85E மற்றும் C2A திருத்தியும் மற்றும் பந்திகள் 4A-4B சேர்த்தும் உள்ளது. உரிமமானது அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| **C2A** | LKAS 08 இன் பந்தி 28 இன் தேவைகள் இருந்த போதிலும் இந்த நியமம் முதற்தரம் பிரயோகிக்கும் போது மற்றும் பின்னர் *முதலீட்டு உரிமங்கள் இந்த கூட்டிணைவு நியமனத்தின் விதிவிலக்குகளை திருத்தங்கள்முதலில் பிரயோகிக்கும் போது உரிமமானது LKAS* 08 இன் பந்தி 28(f) இற்கு தேவைக்கிணங்க எண்ணிக்கையிலான தகவல்களை இந்த நியமத்தின் முதல் பிரயோகத்தின் திகதியின் விரைவான முன்னைய வருடாந்த காலத்தில் வழங்கத்தேவை இல்லை.(முன்னைய விரைவான காலம்) உரிமம் இந்த தகவல்களை நடைமுறைக்காலம் அல்லது முன்னைய ஒப்பீட்டு காலங்களிற்கு சமர்ப்பிக்கலாம், ஆனால் அப்படி செய்வது தேவையாக்கப்படவில்லை. |

## SLFRS 11- கூட்டு ஏற்பாடுகள்

| | |
|---|---|
| **21A** | உரிமமானது கூட்டுத்தொழிற்பாடுகளின் நாட்டத்தை சுவீகரிக்கும் போது அதன் செயற்பாடு ஒரு வியாபாரமாக அமையும் போது SLFRS 3 வியாபார இணைப்புகளின் விளக்கப்பட்டதற்கு இணங்க பந்தி 20 இற்கு அமைவாக அது அதன் பங்கின் அளவிற்கு அமைய மற்றும் ஏனைய நியமங்கள் இந்த இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வழிக்காட்டல் முரண்படாத போது பிரயோகிக்கலாம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் தேவைகளுக்கு இணங்க வியாபார இணைப்புகளுடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். இது ஆரம்ப நாட்டம் மற்றும் மேலதிக நாட்டத்தையும் கூட்டுத்தொழிற்பாடுகளில் சுவீகரிக்கும் போது கூட்டுத் தொழிற்பாடுகளின் செயற்பாடு வியாபாரத்தை கொண்டிருக்கும் போதும் பிரயோகிக்கப்படும். குறிப்பிட்ட கூட்டுத் தொழிற்பாட்டின் ஆர்வம் சுவீகரிக்கப்பட்ட கணக்கீடு பந்திகள் B33A-B33D இல் விளக்கப்பட்டுள்ளது. |
| தலைப்பு | **கூட்டுத்தொழிற்பாடுகளின் நாட்டத்தின் சுவீகரிப்புகளிற்கான கணக்கீடு** |
| B33A | உரிமமானது கூடடுத்தொழிற்பாட்டின் மீது நாட்டத்தை சுவீகரிக்கும் போது அதன் செயற்பாடு வியாபாரமாக அமையும் போது SLFRS 3 இன் வரைவிலக்கணப்படி பந்தி 20 ற்கு அமைவாக அதன் பங்கின் அளவீட்டிற்கு SLFRS 3 இன் வியாபார இணைப்புக்களின் அனைத்து அடிப்படைகளும் மற்றும் ஏனைய இலங்கை கணக்கீட்டு நியமங்களினை பிரயோகிக்கும். இந்த இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வழிக்காட்டல்களிற்கு வேறுபாடு அற்ற அந்த SLFRS இன் வியாபார இணைப்புக்களுடன் தொடர்புடைய தேவையான தகவல்களை வழங்கும். இந்த SLFRS இன் வழிக்காட்டல்களுடன் இணக்கமின்மை அற்ற வியாபார இணைப்புகளின் கணக்கீட்டுடன் தொடர்புடைய அடிப்படைகளாவன உள்ளடக்கியவை ஆனால் வரையறுக்கப்படாதவை,<br><br>(a) SLFRS 3 மற்றும் மற்றைய SLFRS இன் வழங்கப்பட்ட விலக்கள்கள் தவிர்ந்த உருப்படிகள் இணங்காணக்கூடிய சொத்துக்கள் மற்றும் பரிப்புகள் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படும்.<br><br>(b) LKAS 32 நிதி சாதனங்கள் வெளிக்காட்டல்கள் மற்றும் SLFRS 9 இற்கு அமைவாக ஏற்பிசைக்கப்பட்ட பிணைகளை வழங்குவதற்கான கிரயம் அல்லது உரிமையாண்மை பங்குரிமை சான்றுகள் தவிர்ந்த ஏற்பிசைவு சுவீகரிப்புடன் தொடர்புடைய கிரயங்கள் செலவுகளாக செலவுகள் ஏற்பட்ட காலப்பகுதியில் மற்றும் சேவைகள் பெறப்பட்ட காலப்பகுதியின் ஏற்பிசைக்கப்படும்.<br><br>(c) SLFRS 3 மற்றும் LKAS 12 வியாபார இணைப்புகளிற்கான வருமான வரிகளிற்கு தேவையின் நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவினால் உருவான ஒத்திவைக்கப்பட்ட வரி பரிப்புக்கள் தவிர்ந்தவை (ஒத்திவைக்கப்பட்ட வரிச்சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஆரம்ப ஏற்பிசைவின் மூலம் ஏற்பட்ட |

| | |
|---|---|
| | (d) இணங்காணப்பட்ட சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏற்கப்பட்ட பரிப்புகளின் சுவீகரிக்கப்பட்ட தினத்தில் உள்ள தேறிய பெறுமதிகளிற்கு மேலாக கைமாற்றிய விலையின் கூடுதல் பெறுமதியானது ஏதும் இருப்பின் நன்மதிப்பாக ஏற்பிசைக்கப்படும்<br>(e) LKAS 36 சொத்துக்களின் சேதமிழப்பின் வியாபார இணைப்புகளில் சுவீகரிக்கப்பட்ட நன்மதிப்பினை குறிப்பிட்ட நன்மதிப்பு ஒதுக்கப்பட்ட காசு பிறப்பாக்கு அலகுகளின் சேத இழப்பை குறைத்து ஆண்டுக்கு ஒரு முறையாவது பரீட்சித்தல். |
| B33B | SLFRS 3 இன் விளக்கத்தின் படி ஒரு இயங்கும் வியாபாரம் கூட்டுத் தொழிற்பாட்டின் உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்த ஒரு தரப்பினராக பங்கேற்பதாயின் மாத்திரமே பந்திகள் 21A மற்றும் 33A கூட்டுத்தொழில் முயற்சியின் உருவாக்கத்திற்கு பிரயோகிக்கப்படும். ஆயினும் அந்த பந்திகள் கூட்டத்தொழிற்பாட்டுக்கு பங்கேற்கும் அனைத்து சொத்துக்களின் ஒரு தரப்பினரும் சொத்துக்களிற்கு மட்டும் பங்களிப்பு செய்யும் போது அவை கூட்டுத்தொழிற்பாடுகள் உருவாக்கத்தின் வியாபாரமாக அமையாத போது பிரயோகிக்கப்பட மாட்டாது. |
| B33C | SLFRS 3 இல் விவரிக்கப்பட்டதற்கு இணங்க கூட்டுத்தொழில் முயற்சியில் மேலதிக நாட்டத்தை சுவீகரிக்கும் போது கூட்டுத் தொழிற்பாட்டின் வியாபாரமாக கொண்டிருக்கும் போது கூட்டுத் தொழிற்பாட்டின் வியாபாரமாக கொண்டிருக்கும் போது கூட்டுத் தொழிற்பாட்டாளர் கூட்டுத்தொழிலின் நாட்டத்தை அதிகரிக்கலாம். அந்த வழக்குகளில் கூட்டுத் தொழிலாளர் கூட்டுக் கட்டுப்பாட்டை தக்க வைத்திருக்கும் போது முன்னர் கூட்டுத் தொழிற்பாட்டில் வைத்திருந்த நாட்டம் மீண்டும் அளவிடப்பட மாட்டாது. |
| B33D | கூட்டுக்கட்டுப்பாட்டை பகிர்ந்து கொள்ளும் கட்சியினர், கூட்டு செயற்பாட்டின் ஆர்வத்தை கையகப்படுத்திய உரிமமும் உள்ளடங்கிய பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் ஒரே இறுதி கட்டுப்பாட்டுத் தரப்பினர் அல்லது சுவீகரிப்பிற்கு முன்னர் மற்றும் அந்த கட்டுப்பாடு ஆனது நிலையற்றதாக இல்லாத பொழுது கூடடுத்தொழிற்பாட்டின் ஆர்வத்திற்கு பந்திகள் 214 மற்றும் B33A –B33C பிரயோகிக்கப்படமாட்டாது. |
| **பந்தி 33A(b) இற்கான அடிக் குறிப்பு** | உரிமமானது இந்த திருத்தங்களை பிரயோகிக்கும் பொழது ஆயினும் SLFRS 9 ஐ பிரயோகிக்காத பொழுது இந்த திருத்தங்களின் விளக்கங்கள் SLFRS 9 உடன் LKAS 39 39- நிதிச்சாதனங்கள் ஏற்பிசைவும் அளவீட்டுடன் வாசிக்கப்படும். |
| C1AA | **கூட்டுத் தொழிற்பாடுகளின் நாட்டத்தின் கையகப்படுத்தல்களுக்கான கணக்கீடு** (SLFRS11 இற்கு திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்தி B33 இற்கு பின்னரான தலைப்பு திருத்தப்பட்டும் பந்திகள் 21A, B-33A-B-33D, C1AA மற்றும் அதனுடன் தொடர்பான தலைப்பு சேர்க்கப்பட்டும் உள்ளதுடன், பந்திகள் 4A-4B சேர்க்கப்பட்டும் உள்ளது. உரிமமானது அந்த திருத்தங்களை 2016, சனவரி 01 அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும் முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |
| தலைப்பு | **கூட்டுத்தொழிற்பாடுகளின் நாட்டத்தின் சுவீகரிப்புகளிற்கான கணக்கீடு** |
| C14A | கூட்டுத்தொழிற்பாடுகளின் நாட்டத்தின் சுவீகரிப்புகளிற்கான கணக்கீடு (SLFRS 11 இற்கான திருத்தங்கள்) 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்தி B33 இற்கு பின்னரான தலைப்பு திருத்தியும் பந்திகள் 21A, B-33A-B-33D, C1AA மற்றும் அதனுடன் தொடர்பான தலைப்பு சேர்த்தும் உள்ளது. உரிமமானது அந்த திருத்தங்களை கூட்டுத் தொழிற்பாடுகளின் நாட்டத்தின் கையகப்படுத்தலுக்கு முன்நோக்கிய பிரயோகத்தை மேற்கொள்ளலாம். SLFRS 3 இன் விளக்கத்தின்படி அதில் கூட்டுத் தொழிற்பாடுகள் வணிகத்தை உருவாக்கும், அந்த சுவீகரிப்பானது அந்த திருத்தங்களை பிரயோகித்த முதல் காலப்பகுதியின் ஆரம்பத்தில் ஏற்படும். விளைவாக முன்னைய காலங்களில் ஏற்பட்ட கூட்டுத் தொழிற்பாடுகளின் நாட்டத்தின் சுவீகரிப்புகள் செம்மையாக்கப்பட மாட்டாது. |

## SLFRS 12- பிற உரிமங்களிலான நாட்டங்களின் வெளிக்காட்டல்

| | |
|---|---|
| **6 (b) (ii)** | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் முதலீட்டு ஆதனம் அதன் அனைத்து கீழ்நிலை உரிமங்களையும் இலாபநட்ட கணக்கின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியில் SLFRS 10 இன் பந்தி 31 இற்கு அமைவாக இந்த நியமத்தின் தேவைக்கேற்ப முதலீட்டு ஆதனத்துடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்கலாம். |
| **CIC** | முதலீட்டு ஆதனங்கள்: ஒன்றித்தல் விதிவிலக்கை பிரயோகித்தல் (SLFRS 10, SLFRS 12 மற்றும் LKAS 28 இற்கான திருத்தங்கள்), 2015, மாச்சில் வழங்கப்பட்டது. பந்தி 6 திருத்தப்பட்டுள்ளது. உரிமமானது அந்த திருத்தத்தை 2016, சனவரி 01 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தை முன்னைய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். |

## SLFRS 13- சீர்மதிப்பு அளவீடு

மாற்றம் இல்லை

# உள்ளடக்கம்

# இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 14

## *ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்* *பந்திகள்*

நோக்கம் 1

நோக்கெல்லை 5

ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் 9

முன்னிவைப்படுத்தல் 18

வெளிக்காட்டல் 7

பின்னிணைப்புக்கள்

A வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பதங்கள்

B பிரயோக வழிகாட்டி

C அமுலுக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்

# இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS 14
## *ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள்*

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 14 – ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகள் (SLFRS 14) பந்திகள் 1 – 36 மற்றும் பின்னிணைப்பிற்கு A – C இல் குறிப்பிடப்பட்டுள்ளன. சகல பந்திகளும் சமமான அதிகாரத்தை கொண்டுள்ளன. தடித்த எழுத்துக்களில் உள்ள பந்திகள் பிரதானமான தத்துவங்களை குறிப்பிடுகின்றன. பின்னிணைப்பு Aயில் சாய்வெழுத்துக்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள பதங்கள் முதற்தடவையாக நியமத்தில் காணப்படுகின்றவையாகும். ஏனைய பதங்களுக்கான வரைவிலக்கணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான சொல்லகராதியில் தரப்பட்டுள்ளன. இந்த நியமம் அதன் நோக்கம், முடிவுரைகளுக்கான அடிப்படை, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான முகவுரை மற்றும் நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டுச் சட்டகம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தில் வாசிக்கப்பட வேண்டும். வெளிப்படையான வழிகாட்டிகள் இல்லாதவிடத்து, கணக்கீட்டு கொள்கைகளை தெரிவுசெய்து பிரயோகிப்பதற்கான அடிப்படையினை LKAS 8 *கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* எனும் நியமம் வழங்கின்றது.

### நோக்கம்

1 இந்த நியமத்தின் நோக்கமானது, உரிமமொன்று பொருட்கள் அல்லது சேவைகளை விகித ஒழுங்குவிதிகளுக்கு (rateregulation) ஆட்பட்ட விலையில் அல்லது விகிதத்தில் வாடிக்கையாளருக்கு வழங்குவதனால் ஏற்படும் ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளுக்கு (regulatory deferral account balances) நிதியறிக்கையிடற் தேவைப் பாடுகளை குறிப்பிடுவதாகும்.

2 இந்த நோக்கத்தை அடைதலில் நியமம் கீழ்வருவனவற்றை தேவைப்படுத்துகின்றது:

(a) ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளுக்கு, அடிப்படையில் இந்த கணக்குகளின் முன்னிலைப்படுத்தலுடன் தொடர்புபட்ட, முன்னர் பொதுவாக ஏற்றுக்கொண்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு (முன்னைய GAAP) அமைய பிரயோகிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு வரையறுக்கப்பட்ட மாற்றங்கள்.

(b) கீழ்வரும் வெளிக்காட்டல்களை:

(i) விகித ஒழுங்கு விதியிலிருந்து ஏற்பட்டு உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்த தொகைகளை இனங்கண்டு விபரிப்பவை.். அத்துடன்

(ii) ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தப்படும் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளிலிருந்து ஏற்படும் எதிர்காலக் காசுப்பாய்வுகளின் தொகை, காலம் மற்றும் நிச்சயமற்றதன்மை ஆகியவற்றை நிதிக்கூற்றுக்களை பயன் படுத்துனர் விளங்கிக்கொள்ள உதவுபவை.

3 உரிமம் மேலே பந்தி 2 இல் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மாற்றங்களுக்கு அமைய SLFRS இனை கடைப்பிக்கும்போது, இந்த நியமத்தின் தேவைப்பாடுகள், அதன் நோக்கெல்லைக்கு உள்ளாக நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை முன்னைய GAAPக்கு அமைய தொடர்ந்து கணக்கிட அனுமதிக்கின்றது.

4 அத்துடன், ஏனைய நியமங்களில் சில விதிவிலக்குகளை அல்லது விலக்களிப்புகளை இந்த நியமம் ஏற்பாடு செய்கின்றது. ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை அறிக்கையிடுவதற்கு குறிப்பிடப்பட்ட சகல தேவைப்பாடுகள் மற்றும் அந்த மீதிகளுடன் தொடர்புபட்ட ஏனைய நியமங்களில் ஏதும் விதிவிலக்குகள் அல்லது விலக்களிப்புகள் ஆகியவற்றை ஏனைய நியமங்களுக்குப் பதிலாக இந்த நியமம் கொண்டுள்ளது.

## நோக்கெல்லை

5 **கீழ்வரும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் உரிமமொன்று இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை அதன் *முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில்* பிரயோகிக்க அனுமதிக்கப்படும்:**

(a) **அது *விகிதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை* நடாத்துதல். அத்துடன்**

(b) **அது முன்னைய GAAP க்கு அமைவாக, ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளாக தகைமைபெறும் தொகைகளை அதன் நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்திருத்தல்.**

6 **உரிமம் இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்க தெரிவு செய்ததன் மூலம், அதன் முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்திய பிற்போட்ட கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்திருந்தால் மாத்திரமே அதன் பின்னைய காலங்களின் நிதிக்கூற்றுக்களில் அது இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்.**

7 இந்நியமம் விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளில் ஈடுபடும் உரிமங்களின் ஏனைய கணக்கீட்டு விடயங்கள்பற்றி குறிப்பிடவில்லை. இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிப்பதன் மூலம், ஏனைய நியமங்களுக்கு அமைவாக சொத்துக்களாக அல்லது பரிப்புக்களாக ஏற்பிசைவு செய்தல் அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எந்தத்தொகையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடப்பட்ட கணக்கு மீதிகளாக வகைப்படுத்திய தொகைகளில் உள்ளடக்கப்படமாட்டா.

**8 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தினை பிரயோகிக்க தேர்வு செய்யும் உரிமமானது, உரிமத்தின் விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகள் சகலவற்றிலிருந்தும் எழுகின்ற சகல ஒழுங்குபடுத்திய பிற்போடற் கணக்கு மீதிகளுக்கும் அதன் சகல தேவைப்பாடுகளையும் பிரயோகிக்கும்.**

## ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல்

### LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் நியமத்தின் பந்தி 11 இலிருந்து தற்காலிக விலக்களிப்பு

**9 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தினை பிரயோகிக்க தேர்வுசெய்யும், விகிதம்-ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளை கொண்டுள்ள உரிமமொன்று ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் எற்பிசைவு விலக்கலுக்கான கணக்கீட்டுக் கொள்கையை விருத்தி செய்வதில் LKAS 8 இன் பந்திகள் 10 மற்றும் 12 இனை பிரயோகிக்கும்.**

10 ஒரு உருப்படிக்கு குறிப்பாக பிரயோகிக்கக்கூடிய ஒரு உரிய நியமம் இல்லாதவிடத்து, அந்த உருப்படிக்கான கணக்கீட்டுக் கொள்கையினை விருத்தி செய்வதில் முகாமைக்கு தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல் மூலங்களை LKAS 8 இன் பந்திகள் 11-12 குறிப்பிடுகின்றது. இந்நியமம் ஒரு உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கான அதன் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு LKAS 8 பந்தி 11 இனை பிரயோகிப்பதிலிருந்து விலக்களிக்கின்றது. அதன் தொடர் விளைவாக, தமது முன்னைய GAPP க்கு அமைவாக ஒழுங்குபடுத்தல், பிற்போடல் கணக்கு மீதிகளை ஒன்றில் வேறான உருப்படிகளாகவோ அல்லது பிற சொத்துக்கள் அல்லது பரிப்புகளின் முன்கொணரற் பெறுமதியின் பகுதியாகவோ ஏற்பிசைவு செய்யும் உரிமங்கள், இந்நியமத்தின் பந்திகள் 18-19 தேவைப்படுத்தப்படும் முன்னிலைப்படுத்தல் மாற்றங்களுக்கு கட்டுப்பட்டு, LKAS 18 பந்தி 11 இன் விலக்களிப்பின் ஊடாக இந்த நியமத்திற்கு அமைய அந்த மீதிகளை தொடர்ந்து ஏற்பிசைவுசெய்ய அனுமதிக்கப்படும்.

### தற்போதைய கணக்கீட்டுக் கொள்கைகளை தொடருதல்

11 **இந்த நியமத்தின் ஆரம்பப் பிரயோகத்தின்போது, உரிமம் பந்திகள் 13-15 இல் அனுமதிக்கப்பட்ட மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவை தவிர, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கு அதன் முன்னைய GAPP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்து பிரயோகிக்கும். எனினும், அத்தகைய தொகைகளின்**

**முன்னிலைப்படுத்தல், உரிமத்தின் முன்னைய GAPP முன்னிலைப்படுத்தற் கொள்கைகளில் மாற்றங்களை தேவைப்படுத்தும் இந்த நியமத்தின் முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகளுக்கு இசைவாக இருக்கும். (பார்க்க பந்திகள் 18-19).**

12 உரிமம் பந்திகள் 13-15 இனால் அனுமதிக்கப்பட்ட ஏதும் மாற்றங்கள் இருப்பின், அவை தவிர, பந்தி 11 க்கு அமைய தாபிக்கப்பட்ட கொள்கைகளை பின்னைய காலங்களுக்கு கொள்கை மாறாத அடிப்படையில் பிரயோகிக்கும்.

### கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

**13 உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை ஆரம்பிக்க ஏதுவாக அதன் கணக்கீட்டுக் கொள்கையை மாற்றாது. உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கல் ஆகியவற்றிற்கான அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றக்கூடியதாக இருப்பது, அந்த மாற்றம் குறைந்த நம்பகத் தன்மையோ அல்லது கூடிய நம்பகத் தன்மையோ இன்றி பயன்படுத்துனர் பொருளியற் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நிதிக்கூற்றுக்களை மிகவும் தொடர்புடையாதாக ஆக்குவதுடன், அந்த தேவைகளுக்கு குறைந்த தொடர்புடைமையை கொண்டிராதபோது மாத்திரமே. உரிமம் தொடர்புடைமை மற்றும் நம்பகத்தன்மையை LKAS 8 இன் பந்தி 10 இனை பயன்படுத்தி தீர்மானிக்கும்.**

14 இந்நியமம் கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்களுக்கு LKAS 8 இன் பந்தி 10 அல்லது பந்திகள் 14-15 இனை பிரயோகிப்பதிலிருந்து உரிமத்திற்கு விலக்களிக்காது. ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கான அதன் கணக்கீட்டுக்கொள்கை மாற்றத்தை நியாயப்படுத்துவதற்கு உரிமம் அந்த மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களை LKAS 8 பந்தி 10 இலுள்ள தேர்வு நிபந்தனைகளை நிறைவு செய்ய நெருக்கமாக்கும் என்பதனை ஒப்புவிக்க வேண்டும். எனினும், அந்த மாற்றம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கான அந்தத் தேர்வு நிபந்தனைகளுடன் ரணமான ஒத்திசைவினை கொண்டிருக்க வேண்டியதில்லை.

15 பந்திகள் 13-14 இந் நியமத்தின் ஆரம்பப் பிரயோகத்தின்போது மேற்கொள்ளும், மற்றும் பின்னைய அறிக்கையிடற் காலங்களில் மேற்கொள்ளும் மாற்றங்கள் இரண்டிற்கும் பிரயோகிக்கப்படும்.

### ஏனைய நியமங்களுடன் இடைத்தொடர்பு

**16 ஏனைய நியமங்களுடனான இந்த நியமத்தின் இடைத்தொடர்புடன் தொடர்புபட்ட குறிப்பான விதிவிலக்குகள், விலக்களிப்புக்கள் அல்லது மேலதிக தேவைப்பாடுகளை இந்த நியமம் கொண்டுள்ளது (பார்க்க பந்திகள் B7-B18). அத்தகைய விதிவிலக்கு, விலக்களிப்பு அல்லது மேலதிக தேவைப்பாடு இல்லாதபட்சத்தில், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கு ஏனைய நியமங்கள் அந்த நியமங்களுக்கு அமைய ஏற்பிசைவு செய்யப்படும் சொத்துக்கள், பரிப்புக்கள் வருமானம் மற்றும் செலவுகளில் பிரயோகிக்கப்படும் அதே வகையிலேயே பிரயோகிக்கப்படும்.**

17 சிலசந்தர்ப்பங்களில், நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான முறையில் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக பந்திகள் 11-12 க்கு அமைவாக தாபிக்கப்பட்ட கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக அளவிட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிக்கு வேறு நியமத்தினை பிரயோகிக்க வேண்டி ஏற்படலாம். உதாரணமாக, ஊடுசெயல்களும் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளும் அறிக்கையிடும் உரிம தொழிற்பாட்டு நாணயமல்லாத நாணயத்தில் தெரிவிக்கப்படும் அந்நிய நாடொன்றில் உரிமம் விகிதம்- ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை கொண்டிருக்கலாம். ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளும் அந்த மீதிகளில் அசைவுகளும் (மாற்றங்களும்) LKAS 21 அந்நிய நாணயமாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள் எனும் நியமத்திற்கு அமைவாக நாணயமாற்றம் செய்யப்படும்.

## முன்னிலைப்படுத்தல் (Presentation)

### முன்னிலைப்படுத்தல் மாற்றங்கள்

18 இந்த நியமம், பந்திகள் 11-12 க்கு அமைய ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகளை பந்திகள் 20-26 இல் அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த நியமம் பிரயோகிக்கப்படும்போது, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள், ஏனைய நியங்களுக்கு அமைய ஏற்பிசைவு செய்யப்படும் சொத்துக்கள், பரிப்புகளுக்கு மேலாக நிதிநிலைக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். இந்த முன்னிலைப்படுத்தற் தேவைப்பாடுகள், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் தாக்கத்தை ஏனைய நியமங்களின் நிதியறிக்கையிடற் தேவைப்பாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும்.

19 LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் நியமத்திற்கு அமைவாக நிதிநிலைக் கூற்று மற்றும் இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்த வேண்டிய உருப்படிகளுக்கு மேலாக, இந்த நியமத்தை பிரயோகிக்கும் உரிமமொன்று, பந்திகள் 20-26 க்கு அமைவாக சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளை வெளிக்காட்டும்.

### ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் வகைப்படுத்தல

**20 உரிமம் நிதிநிலைக் கூற்றில் கீழ்வருவனவற்றிற்கு வேறாக வரிசை உருப்படிகளை வெளிக்காட்டும்:**

**(a) சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகளின் வரவு மீதிகளின் மொத்தத் தொகை.**

**(b) சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்குகளின் செலவு மீதிகளின் மொத்தத் தொகை.**

**21 உரிமமொன்று அதன் நிதிநிலைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களையும், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பரிப்புக்களையும் வேறான வகைப்படுத்தல்களாக முன்னிலைப்படுத்தும் போது, அது ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் மொத்தங்களை நடைமுறை மற்றும் நடைமுறையற்றவையாக வகைப்படுத்தாது. பதிலாக, பந்தி 20 இனால் தேவைப்படுத்தப்படும் வேறான வரிசை உருப்படிகள் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை முன்னிலைப்படுத்த முன்னர் உப மொத்தங்களை பயன்படுத்தி ஏனைய நியமங்களுக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் சொத்துக்கள், பரிப்புக்களிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படும்.**

### ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளில் அசைவுகளின் வகைப்படுத்தல்

**22 உரிமமொன்று பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உருப்படிகள் தொடர்புபட்ட அறிக்கையிடற் காலத்திற்கான சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் நிகர அசைவினை (மாற்றங்களை) இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்றின் ஏனைய முற்றடக்க வருமானப் பிரிவில் ஏற்பிசைவு செய்யும். ஏனைய நியமங்களுக்கு அமைவாக, பின்வருமாறு அமையும் உருப்படிகள் தொடர்புபட்ட நிகர அசைவுக்கு வேறான வரிசை உருப்படிகள் பயன்படுத்தப்படும்:**

**(a) பின்னர் இலாப நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படாதவை. மற்றும்**

**(b) பின்னர், குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போது இலாப நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படுபவை.**

**23 உரிமம் அறிக்கையிடற் காலத்திற்கான, கொள்வனவு செய்யப்பட்ட தொகைகள் போன்ற இலாப நட்டத்தில் பிரதிபலிக்கப்படாத, எஞ்சிய சகல ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் நிகர அசைவினை இலாப நட்ட மற்றும் முற்றடக்க வருமானப் பிரிவில் அல்லது வேறான இலாப நட்டக் கூற்றில் வேறான வரிசை உருப்படியாக முன்னிலைப்படுத்தும். இந்த வேறான வரிசை உருப்படி, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை முன்னிலைப்படுத்த முன்னர் உப மொத்தங்களை பயன்படுத்தி ஏனைய நியமங்களுக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் வருமானம் மற்றும் செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படும்.**

24 உரிமமொன்று ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் விளைவாக ஏற்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை அல்லது பிற்போடப்பட்ட வரிப் பரிப்பினை ஏற்பிசைவு செய்யும்போது, அந்த உரிமம் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை (பரிப்பினை), அது தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளுடன் சேர்த்து,

LKAS 12 வருமான வரிகள் நியமத்திற்கு அமைவான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களுக்களுக்காக (பரிப்புக்களுக்காக) மற்றும் வரிச் செலவுகளுக்காக (வருமானத்திற்காக) முன்னிலைப்படுத்தப்படும் மொத்தத்தினுள் முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக வேறாக முன்னிலைப்படுத்தும். (பார்க்க பந்திகள்: B9-B12).

25 உரிமம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடொன்றினை அல்லது விற்பனைக் குழுமமொன்றினை SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளும்* நியமத்திற்கு அமைய முன்னிலைப்படுத்தும் போது, உரிமம் தொடர்புடைய எந்தவொரு ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளையும் அந்த மீதிகளின் நிகரஅசைவினையும் பொருத்தமான இடத்து, விற்பனைக்குழுமம் அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாட்டில் முன்னிலைப்படுத்துவதற்குப் பதிலாக ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் மற்றும் அந்த மீதிகளில் அசைவுகளில் முன்னிலைப்படுத்தும். (பார்க்க பந்திகள் B19-B22).

26 உரிமம் பங்கொன்றிற்கான வருவாயை LKAS 33 *பங்கொன்றிற்கான வருவாய்* எனும் நியமத்திற்கு அமைய முன்னிலைப்படுத்தும் போது, உரிமம் LKAS 33 இனால் தேவைப்படுத்தப்பட்ட, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் அசைவுகள் தவிர்ந்த, வருமானத் தொகைகளை பயன்படுத்தி கணிக்கப்படும் அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட பங்கொன்றிற்கான வருவாயை மேலதிகமாக வெளிக்காட்டும். (பார்க்க பந்திகள் B13-B14).

## வெளிக்காட்டல்கள்

### நோக்கம்

**27 இந்த நியமத்தினை பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்யும் உரிமம், பயன்படுத்துனர் கீழ்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு ஏதுவான தகவல்களை வெளிக்காட்டும்:**

**(a) உரிமம் அது வழங்கும் பொருட்கள், சேவைகளுக்கு வாடிக்கையாளரிடம் அறவிடக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் வீத ஒழுங்குவிதிகளின் தன்மை மற்றும் தொடர்புபட்ட இர்கள்.∴ மற்றும்**

**(b) அதன் நிதிநிலைமை, நிதித் தொழிற்பாடு மற்றும் காசுப் பாய்வுகளில் அந்த வீத ஒழுங்குவிதியின் தாக்கங்கள்.**

28 பந்திகள் 30-36 இல் குறிப்பிட்ட எந்த வெளிக்காட்டலும் பந்தி 27 இன் நோக்கங்களை நிறைவு செய்வதில் தொடர்பற்றவையாக கருதப்படுமிடத்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து அவை தவிர்க்கப்படலாம். பந்தி 27 இன் நோக்கங்களை நிறைவு செய்வதில் பந்திகள் 30-36 க்கு அமைய வழங்கப்படும் வெளிக்காட்டல் போதுமானவையாக இல்லாவிடில், உரிமம் அந்த நோக்கங்களை நிறைவுசெய்வதற்கு அவசியமான மேலதிக தகவல்களை வெளிக்காட்டும்.

29 பந்தி 27 இன் வெளிக்காட்டல் நோக்கத்தினை நிறைவுசெய்வதற்கு, உரிமம் கீழ்வரும் எல்லாவற்றையும் கவனத்திற் கொள்ளும்:

(a) வெளிக்காட்டற் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யத் தேவையான விபரங்களின் மட்டம்.

(b) வேறுபட்ட தேவைப்பாடு ஒவ்வொன்றிலும் வைக்கவேண்டிய முக்கியத்துவத்தின் அளவு.

(c) மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்று சேர்க்கை அல்லது பிரிவுபடுத்தல்களின் அளவு.

(d) வெளிக்காட்டிய கணியரீதியான தகவல்களின் மதிப்பாய்வுக்கு நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துனருக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுமா என்பதுபற்றி.

### வீத ஒழுங்குவிதிகளுக்கு ஆளாகும் செயற்பாடுகள் பற்றிய விளக்கம்

30 நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துனருக்கு வீதம்-ஒழுங்குபடுத்திய உரிமச் செயற்பாடுகளின் தன்மை மற்றும் தொடர்புபட்ட இடர்களை மதிப்பிடுவதற்கு உதவும் பொருட்டு, உரிமம் ஒவ்வொரு வகையான வீதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாட்டிற்கும் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) விகித-ஒழுங்குபடுத்தற் செயற்பாட்டின் தன்மை மற்றும் அளவு மற்றும் ஒழுங்குபடுத்தல் விகித நிர்ணய செயன்முறையின் தன்மை பற்றிய சுருக்கமான விபரம்.∴

(b) விகித ஒழுங்குபடுத்துனர்களை அடையாளம் காணல். விகித ஒழுங்குபடுத்துனர் உறவுமுறைத் தரப்பினராக (LKAS 24 *உறவுமுறைத் தரப்பினர் வெளிக்காட்டல்*

நியமத்தில் பொருள் வரையறை செய்தவாறு) இருப்பின், அந்த உண்மையை எவ்வாறு உறவுமுறை ஏற்பட்டது என்ற விபரத்துடன் உரிமம் வெளிக்காட்டும்.'.

(c) ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவு மீதியின் ஒவ்வொரு வகுப்பினதும் (அதாவது, கிரய அல்லது வருமான வகை ஒவ்வொன்றினதும்) எதிர்கால மீளப் பெறுகை அல்லது ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதியின் ஒவ்வொரு வகுப்பினதும் எதிர்ப்பதிவு ஆகியன இடர்கள் மற்றும் நிட்சயமற்ற தன்மையினால் எவ்வாறு பாதிப்பிற்கு ஆளாகின்றன என்பதுபற்றி. உதாரணமாக,

(i) கேள்வி இடர் (demand risk) (உதாரணமாக, நுகர்வோர் மனப்பாங்கில் மாற்றங்கள், மாற்று வழங்கல்மூலங்கள் கிடைத்தல் அல்லது போட்டியின் அளவு).

(ii) ஒழுங்குபடுத்தல் இடர் (உதாரணமாக, விகித நிர்ணய விண்ணப்பத்தின் சமர்ப்பிப்பு அல்லது அங்கீகாரம் அல்லது எதிர்பார்க்கப்படும் எதிர்கால ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் பற்றிய உரிமத்தின் மதிப்பீடு). மற்றும்

(iii) ஏனைய இடர்கள் (உதாரணமாக, நாணய இடர் அல்லது ஏனைய சந்தை இடர்கள்).

31 பந்தி 30 இல் கேட்கப்பட்டுள்ள வெளிக்காட்டல்கள் நேரடியாக குறிப்புக்களின் மூலமோ அல்லது நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு அதே கட்டுறுப்புக்களின்கீழ் ஒரே காலத்தில் கிடைக்கின்ற முகாமை வியாக்கியானம் அல்லது இடர் அறிக்கை போன்ற வேறுசில கூற்றிற்கு இடைத்தொடர்புபடுத்துவதன் மூலமோ நிதிக்கூற்றுக்களில் தரப்படும். தகவல்கள் நேரடியாக அல்லது இடைத்தொடர்பு படுத்துவதன்மூலம் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்படாதவிடத்து, நிதிக்கூற்றுக்கள் □ரணமற்றவையாகும்.

## ஏற்பிசைவுசெய்யப்பட்ட தொகைகள் பற்றிய விளக்கங்கள்

32 உரிமம், ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளின் மீளப்பெறுகையை எவ்வாறு மதிப்பிட்டது மற்றும் சேத இழப்பு நட்டம் ஏதுமிருப்பின் அது எவ்வாறு ஒதுக்கப்பட்டது என்பவை அடங்கலாக, ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகள் ஏற்பிசைவு அல்லது ஏற்பிசைவு விலக்கல் செய்யப்பட்ட மற்றும் ஆரம்பத்திலும் பின்னரும் அவை அளவிடப்பட்ட அடிப்படைகளை வெளிக்காட்டும்.

33 ஒவ்வொரு வகையான விகிதம்-ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளை பொறுத்தமட்டில், ஒவ்வொருவகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கும் கீழ்வருவனவற்றை உரிமம் வெளிக்காட்டும்:

(a) வேறு படிவமைப்பு பொருத்தமானதாக இருந்தாற் தவிர, அட்டவணையொன்றில் காலஆரம்பம் மற்றும் இறுதியில் முன்கொணரற் தொகைகளின் கணக்கிணக்கம். அவசிய விபர மட்டத்தை தீர்மானிப்பதில் உரிமம் சுயதீர்ப்பினை மேற்கொள்ளும் போதிலும் (பார்க்க பந்திகள் 28-29), கீழ்வரும் கூறுகள் வழமையாக தொடர்பு பட்டவையாகும்:

(i) நடப்புக் கால நிதிநிலைக் கூற்றில் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள்.

(ii) நடப்புக் காலத்தில் மீளப்பெறப்பட்ட (சிலசமயங்களில் காலத்தேய்மானம் செய்யப்பட்டதாக கூறப்படும்) அல்லது எதிர்ப்பதிவு செய்யப்பட்ட மீதிகள் தொடர்பில் இலாப நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள். மற்றும்

(iii) சேத இழப்புக்கள், வியாபார இணைப்பின்போது பெற்ற அல்லது சுவீகரித்த உருப்படிகள், விற்பனை செய்த உருப்படிகள், அந்நிய நாணய மாற்று வீதங்களில் அல்லது கழிவு வீதங்களில் மாற்றங்களின் தாக்கம் போன்ற ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளை பாதித்த வேறாக இனம் காணப்பட்ட ஏனைய தொகைகள்.

(b) ஒவ்வொரு வகையான ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுக்கும் பொருத்தமான, பணத்தின் காலப்பெறுமதியை பிரதிபலிப்பதற்கு பயன்படுத்திய வருமான வீதம் அல்லது கழிவு வீதம் (பொருத்தமான இடத்து □ஜ்ய விகிதம் அல்லது விகிதங்களின் வீச்சம் உட்பட).

(c) ஒவ்வொரு வகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவுமீதி முன்கொணரற் தொகையினை மீளப்பெறுவதற்கு (அல்லது காலத்தேய்மானம் செய்வதற்கு) அல்லது ஒவ்வொரு வகை ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு செலவுமீதியை எதிர்ப்பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எஞ்சியுள்ள காலம்.

34 விகித ஒழுங்குவிதி உரிமத்தின் வருமான வரிச் செலவு (வருமான) தொகை மற்றும் காலத்தை பாதிக்கும் போது உரிமம் ஏற்பிசைவுசெய்த வருமான மற்றும் பிற்போட்ட வரித்தொகைகள் மீது விகித ஒழுங்குவிதி கொண்டுள்ள தாக்கத்தை வெளிக்காட்டும். அத்துடன், வரியீடு மற்றும் அந்தமீதியின் அசைவு தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதி ஏதும் இருப்பின் அதனை வேறாக வெளிக்காட்டும்.

35 விகித ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை கொண்டதும், அவற்றிற்காக இந் நியமத்திற்கு அமைய ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதிகளுகளை ஏற்பிசைவு செய்ததுமான உபகம்பனி, கூட்டுக் கம்பனி அல்லது கூட்டுத் தொழில்முயற்சிகளில் கொண்டுள்ள நாட்டத்திற்கு உரிமம் SLFRS 12 *ஏனைய உரிமங்களில் நாட்டங்களின் வெளிக்காட்டல்* நியமத்திற்கு அமைவாக வெளிக்காட்டல்களை தரும்போது, உரிமம் ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு வரவு மற்றும் செலவு மீதிகளுக்காக உட்படுத்தப்பட்ட தொகைகள் மற்றும் வெளிக்காட்டப்பட்ட நாட்டங்களுக்காக அந்த மீதிகளில் அசைவுகளையும் வெளிக்காட்டும் (பார்க்க பந்திகள் B25-B28).

36 ஒழுங்குபடுத்தல் பிற்போடல் கணக்கு மீதியை இனியும் முற்றாக மீளப்பெறவோ அல்லது எதிர்ப்பதிவு செய்யவோ முடியாது என உரிமம் முடிவுக்கு வரும்போது, அது அந்த உண்மையையும், அவ்வாறு செய்ய முடியாமைக்கான காரணத்தையும், ஒழுங்கு படுத்தல் பிற்போடல் கணக்கு மீதி எந்தத் தொகையால் குறைவடைந்ததோ அந்தத் தொகையையும் வெளிக்காட்டும்.

# பின்னிணைப்பு A

## பொருள்வரையறை செய்யப்பட்ட பதங்கள்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

| | |
|---|---|
| **முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்கள்** | உரிமம் SLFRS உடனான ஒத்திசைவை வெளிப்படையாகவும் நிபந்தனைகள் அற்ற விதத்திலும் தெரிவிக்கும் வகையிலான, உரிமம் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை (SLFRS) கடைப்பிடிக்கும் முதலாவது வருடாந்த நிதிக் கூற்றுக்கள் |
| **முதற் தடவைக் கடைப்பிடிப்பாளர்** | முதலாவது **SLFRS நிதிக்கூற்றுக்களை** முன்னிலைப்படுத்தும் உரிமம். |
| **முன்னைய GAAP** | SLFRS இனை கடைப்பிடிப்பதற்கு உடனடியாக முன்னதாக **முதற்தடவைக் கடைப்பிடிப்பாளர்** பயன்படுத்திய கணக்கீட்டு அடிப்படை |
| **விகிதம்-ஒழுங்குபடுத்தப்படும் செயற்பாடுகள்** | உரிமமொன்றின் **விகித-ஒழுங்குபடுத்தலுக்கு** ஆளாகின்ற செயற்பாடுகள் |
| **விகித-ஒழுங்குபடுத்தல்** | விகித ஒழுங்குபடுதுநரின் மேற்பார்வை அத்துடன் / அல்லது அங்கீகாரத்திற்கு உட்பட்ட, பொருட்கள்/ சேவைகளுக்காக வாடிக்கையாளரிடம் அறவிடும் விலையை நிர்ணயிப்பதற்கான வேலைச்சட்டகம் |
| **விகித ஒழுங்குபடுத்துனர்** | உரிமத்தை கட்டுப்படுத்தும் விகிதம் அல்லது விகிதங்களின் வீச்சத்தினை நிர்ணயிப்பதற்கு சட்டவாக்கத்தினால் அல்லது ஒழுங்குவிதியால் அதிகாரம் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும். விகித ஒழுங்குபடுத்துனர், வாடிக்கையாளரின் நாட்டம் மற்றும் உரிமத்தின் ஒட்டுமொத்த நிதிசார் இலாபத் தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக விகிதங்களை நிர்ணயிக்குமாறு சட்டத்தால் அல்லது ஒழுங்குவிதியால் கேட்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரிமத்தின் சொந்த ஆளுமைச் சபை உட்பட, ஒரு மூன்றாம் தரப்பு அமைப்பாக அல்லது உரிமத்தின் உறவுமுறைத் தரப்பாக இருக்கலாம். |
| **ஒழுங்குபடுத்தற் பிற் போடல் கணக்கு மீதி** | பிற நியமங்களுக்கு அமைய சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யமுடியாத, ஆனால் வாடிக்கையாளருக்கு தாக்கல் செய்யக்கூடிய விகிதத்தை நிர்ணயிப்பதில் விகித ஒழுங்குபடுத்துனர் உட்படுத்துவதன் அல்லது உட்படுத்த எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக பிற்போடலுக்கு தகைமை பெறும் எந்தச் செலவு (அல்லது வருமானக்) கணக்கு மீதி. |

# பின்னிணைப்பு B

# பிரயோக வழிகாட்டல்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

## விகிதம்-ஒழுங்குபடுத்தப்படும் செயற்பாடுகள்

B1 வரலாற்று ரீதியாக விகித ஒழுங்குபடுத்தல் உரிமமொன்றின் சகல செயற்பாடுகளுக்கும் பிரயோகிக்கப்படும். எனினும், சுவீகரிப்புக்கள், பல்துறைப்படுத்தல்கள் (diversification), ஒழுங்குவிதித் தளர்த்தல்கள் (deregulation) ஆகியவற்றின் காரணமான விகித-ஒழுங்குபடுத்தல்கள், உரிமம் கொண்டுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத செயற்பாடுகளின் காரணமாக ஏற்படும் செயற்பாடுகளின் ஒரு பகுதிக்கு மாத்திரமே தற்போது பிரயோகிக்கப்படக்கூடும். இந்த நியமம், உரிமத்தின் வகை அல்லது அதன் தொழிற்துறையை கவனத்திற்கொள்ளாது, விகித ஒழுங்குபடுத்துனரின் செயற்பாடுகளின் மூலம் சட்டரீதியான அல்லது ஒழுங்குவிதி சார்ந்த மட்டுப்படுத்தல்களுக்கு ஆளாகின்ற விகிதம்- ஒழுங்குபடுத்திய செயற்பாடுகளுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும்.

B2 உரிமமொன்று இந்த நியமத்தினை சுயமாக ஒழுங்குபடுத்தப்படுகின்ற (self-regulated) அதாவது, ஒரு விகித ஒழுங்குபடுத்துனரால் மேற்பார்வை செய்யப்படும் அல்லது அவர் அங்கீகாரம் தேவைப்படும் விலையிடல் சட்டகத்திற்கு ஆளாகாத செயற்பாடுகளுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது. இது கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இந்த நியமத்தை பிரயோகிப்பதிலிருந்து உரிமமொன்றினை தடைசெய்யாது:

(a) உரிமத்தின் சொந்த ஆளுமைச்சபை அல்லது உறவுமுறைத் தரப்பொன்று குறிப்பிடப்பட்ட விலையிடல் வேலைச் சட்டகத்திற்கு உட்பட்டு, வாடிக்கையாளர் நாட்டம் மற்றும் உரிமத்தின் ஒட்டுமொத்த நிதிசார் இலாபத் தன்மையை உறுதிப்படுத்தும் விதமாக விகிதங்களை நிர்ணயிக்கும்போது. அத்துடன்

(b) அந்த வேலைச் சட்டகம், சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதியினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பொன்றின் மேற்பார்வை அல்லது / அத்துடன் அங்கீகரிப்பிற்கு ஆளாகும்போது.

## தற்போதைய கணக்கீட்டுக் கொள்கைகளை தொடருதல்

B3 இந்த நியமத்தின் தேவைகளுக்காக ஒழுங்குபடுத்திய பிற்போடல் கணக்கு மீதி என்பது, பிற நியமங்களுக்கு அமைய சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யமுடியாத, ஆனால் வாடிக்கையாளருக்கு தாக்கல் செய்யக்கூடிய விகிதத்தை நிர்ணயிப்பதில் விகித ஒழுங்குபடுத்துனர் உட்படுத்துவதன் அல்லது உட்படுத்த எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக பிற்போடலுக்கான தகைமை பெறும் செலவு (அல்லது வருமான) கணக்கு மீதி என பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளது. சில செலவு (வருமான) உருப்படிகள்
ஒழுங்குபடுத்தப்பட்ட விகிதங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடும். உதாரணமாக, தொகைகள் விகித ஒழுங்குபடுத்துனரால் ஏற்றுக்கொள்ளப்படாத அல்லது அவை விகித ஒழுங்குபடுத்தல் நோக்கெல்லைக்கு உட்படாத காரணத்தால். இதன் தொடர்விளைவாக அத்தகைய ஒரு உருப்படி, வேறொரு உரிமத்தால் சொத்தொன்றின் அல்லது பரிப்பின் முன்கொணரற் தொகையில் உட்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டோ அல்லது தேவைப்படுத்தப்பட்டோ இருந்தாலன்றி, வருமானமாக அல்லது இறுக்கப்பட்ட செலவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

B4 சில சந்தர்ப்பங்களில், முன்னைய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக வேறாகவோ அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் போன்ற வேறு வரிசை உருப்படிகளிலோ ஏற்பிசைவு செய்திருக்கக்கூடிய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை, உரிமம் நிதிநிலைக் கூற்றில் ஏற்பிசைவு செய்வதனை வேறு நியமங்கள் வெளிப்படையாக தடைசெய்கின்றன. எனினும் இந்த நியமத்தின் பந்தி 11 இற்கு அமைய உரிமம் அதன் முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்களில் இந்த நியமத்தினை பிரயோகிக்க தெரிவுசெய்யும்போது, அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முன்னைய GAAP கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ந்தும் பிரயோகிப்பதற்கு ஏதுவாக, LKAS 8 இன் பந்தி 11

இன் விலக்களிப்பை பிரயோகிக்கும். அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள், உதாரணமாக கீழ்வரும் நடைமுறைகளை, உட்படுத்தக்கூடும்:

(a) அனுமதிக்கப்பட்ட கிரயங்களை (அதாவது, ஒழுங்குபடுத்தல் விகிதங்கள் மீளப் பெறுதலை வழங்குமென கருதப்படும் கிரயங்கள்) மீளப்பெறுவதற்கு ஏதுவாக எதிர்காலங்களில் வீதங்களை அதிகரிப்பதற்கான வீத ஒழுங்குபடுத்துனரின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளின் காரணமாக உரிமத்திற்கு உரிமையுள்ளபோது, அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரவு மீதியினை ஏற்பிசைவு செய்தல்.

(b) எதிர்கால வீதங்கள் மூலம் மீளப்பெறுவதற்கு அல்லது எதிர்ப்பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரண மற்றும் அருவச் சொத்து உருப்படிகள் இரண்டினதும் விற்பனையால் அல்லது விலக்கலினால் ஏற்படுகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டத்திற்கு சமமான தொகையை ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவு அல்லது செலவு மீதியாக ஏற்பிசைவு செய்தல்.

(c) அனுமதிக்கப்பட்ட கிரயங்களின் மிகையான அறவீடுகளை (அதாவது, விகித ஒழுங்குபடுத்துனரால் குறிப்பிட்ட மீளப்பெறற் தொகைக்கு மிகையான தொகை) எதிர்ப்பதிவு செய்வதற்கு ஏதுவாக எதிர்காலங்களில் வீதங்களை குறைப்பதற்கான வீத ஒழுங்குபடுத்துனரின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் செயற்பாடு காரணமாக உரிமம் தேவைப்படுத்தப்படின், அது ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு செலவு மீதியினை ஏற்பிசைவு செய்தல்.

(d) ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை கழிவு செய்யாத அடிப்படையில் அல்லது வீது ஒழுங்குபடுத்துனரால் குறிப்பிடும் வட்டி அல்லது கழிவு வீதத்தை பயன்படுத்தும் கழிவீட்டு அடிப்படையில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை அளவிடுதல்.

B5 வீதம் நிர்ணயம் செய்யும் தீர்மானங்களில் விகித ஒழுங்குபடுத்துனர்கள் அனுமதிக்கக் கூடிய கிரய வகைகளுக்கு கீழ்வருவன உதாரணங்களாவதுடன், எனவே, ஒரு உரிமம் இவற்றை ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளில் ஏற்பிசைவு செய்யலாம்:

(i) கனவளவு அல்லது கொள்வனவு விலை முரண்கள்.

(ii) அனுமதிக்கப்பட்ட ‘பசுமைச் சக்தி ஆக்கமுனைப்புக் கிரயங்கள் (LKAS 16 *ஆதனம், பொறி மற்றும் உபகரணம்* நியமத்திற்கு அமைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் பகுதியாக மூலதனப்படுத்திய தொகைக்கு மேற்பட்டவை);

(iii) விகித ஒழுங்குபடுத்தற் தேவைகளுக்காக மூலதன கிரயங்களாக கையாளப்படும் நேரடியாக ஒதுக்கப்பட முடியாத மேந்தலைக் கிரயங்கள் (ஆனால், LKAS 16 இற்கு அமைய ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் கிரயத்தில் உட்படுத்தப்பட அனுமதிக்கப்படாதவை);

(iv) செயற்திட்டங்களை இரத்துச் செய்தற் கிரயங்கள்.

(v) புயற் சேத (storm damage) கிரயங்கள்.

(vi) கருதப்படும் வட்டி (நிருமானத்தின்போது பயன்படுத்தப்பட்டு, அது உரிமையாளர் உரிமையாண்மை மூலதனம் மற்றும் கடன்படுகை மீது உரிமத்திற்கு வருமானம் தருகின்ற, அனுமதிக்கப்பட்ட நிதியங்களின் தொகைகள் உள்ளடங்கலாக).

B6 ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகள் வழக்கமாக ஒழுங்குபடுத்தற் தேவையின் பொருட்டு வருமான அல்லது செலவு உருப்படியாக ஏற்பிசைவு செய்யும் காலத்திற்கும், அந்த உருப்படியை நிதியறிக்கைக் தேவைக்காக ஏற்பிசைவு செய்யும் காலத்திற்கும் இடையிலான கால வேறுபாட்டினை பிரதிபலிக்கின்றது. உரிமமொன்று, SLFRS இனை முதற்தடவையாக கடைப்பிடிப்பதனால் அல்லது புதிய அல்லது மீளாக்கப்பட்ட நியமம் ஒன்றினை முதன்முறையாக பிரயோகிப்பதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்றினை மாற்றும் போது, புதிய அல்லது மீளாக்கப்பட்ட கால வேறுபாடுகள் ஏற்படக்கூடும். அது புதிய அல்லது மீளாக்கிய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்படுத்தும். ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, உரிமம் அதன் கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றத்தினை தடைசெய்யும் பந்தி 13 இன்

தடையானது, SLFRS தேவைப்படுத்தும் ஏனைய கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்களின் காரணமாக ஏற்படும் புதிய அல்லது மீளாக்கிய ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை தடைசெய்யாது. அதற்கான காரணம், அத்தகைய கால வேறுபாடுகளுக்கான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவானது, பந்தி 11 இற்கு அமைய தற்போது பிரயோகிக்கும் ஏற்பிசைவுக் கொள்கைக்கு இசைவாக உள்ளதுடன், அது புதிய கணக்கீட்டுக் கொள்கையின் அறிமுகத்தை பிரதிபலிக்காமை ஆகும். அதேபோல பந்தி 13 ஆனது, SLFRS இற்கு மாறிய திகதிக்கு உடனடியாக முன்பதாக இருந்திராத, ஆனால் பந்தி 11 க்கு அமைவாக தாபிக்கப்பட்ட உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இசைவாகவுள்ள கால வேறுபாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவினை தடைசெய்யாது (உதா: புயற்சேதக் கிரயங்கள்).

## ஏனைய நியமங்களின் பிரயோகித்தற்தகவு

B7 இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டு, இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்க தெரிவு செய்யும் ஒரு உரிமம் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்தும் பிரயோகிக்கும். இருந்தபோதிலும், சில சந்தர்ப்பங்களில் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான முறையில் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக, ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு ஏனைய நியமங்களையும் பிரயோகிக்கவேண்டி ஏற்படலாம் என பந்திகள் 16-17 கூறுகின்றன. இந்த நியமத்தின் தேவைப்பாடுகளுடன் ஏனைய சில நியமங்கள் எவ்வாறு இடைத்தாக்கம் கொண்டுள்ளன என்பதனை கீழ்வரும் பந்திகள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக, கீழ்வரும் பந்திகள் பிற நியமங்களுக்கான குறிப்பிட்ட விதிவிலக்குகள், அவற்றிலிருந்து விலக்களிப்புகள் மற்றும் பிரயோகிக்க எதிர்பார்க்கின்ற மேலதிக முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் ஆகியவற்றை தெளிவுபடுத்துகின்றன.

### LKAS 10 *அறிக்கையிடற் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகள்* நியமத்தின் பிரயோகம்

B8 ஒரு உரிமம் அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டில் மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் பயன்படுத்தவேண்டி ஏற்படலாம். அறிக்கையிடற் கால முடிவுக்கும் நிதியறிக்கைகள் வழங்கலுக்காக அங்கீகரிக்கப்படும் திகதிக்கும் இடையில் இடம்பெறும் நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்கு அந்த மதிப்பீடுகளும் எடுகோள்களும் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டுமா என்பதனை இனங்காண்பதற்கு உரிமம் LKAS 10 இனை பிரயோகிக்கும்.

### LKAS 12 *வருமான வரிகள்* நியமத்தின் பிரயோகம்

B9 LKAS 12, சகல தற்காலிக வித்தியாசங்களுக்கும் ஒரு உரிமம், சில வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு அமைய, பிற்போடப்பட்ட வரிப்பரிப்பினையும் (சில நிபந்தனைக்கு அமைய) பிற்போடப்பட்ட வரிச்சொத்தினையும் ஏற்பிசைவு செய்யவேண்டுமென தேவைப்படுத்துகின்றது. விகித ஒழுங்குபடுத்தலுக்கு ஆளாகும் உரிமமொன்று ஏற்பிசைவு செய்ய வேண்டிய வருமானவரித் தொகையினை இனங்காண்பதற்கு, விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகள் உட்பட அதன் சகல செயற்பாடுகளுக்கும் LKAS 12 நியமத்தினை பிரயோகிக்கும்.

B10 சில விகித ஒழுங்குபடுத்தற் திட்டங்களில் உரிமத்தின் வருமான வரிச் செலவுகளின் பகுதியை அல்லது முழுவதையும் மீளப்பெறுவதற்கு ஏதுவாக உரிமம் அதன் எதிர்கால வீதங்களை அதிகரிப்பதனை விகித ஒழுங்குபடுத்துனர் அனுமதிப்பர் அல்லது தேவைப்படுத்துவர். அத்தகைய சந்தர்ப்பங்களில், இது உரிமம் பந்திகள் 11-12 இற்கு அமைய தாபிக்கப்பட்ட அதன் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக நிதிநிலைக் கூற்றில் வருமானவரி தொடர்பாக ஒரு ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதி ஏற்பிசைவு செய்யப்படுவதனை விளைவிக்கலாம். வருமானவரி தொடர்பாக இந்த ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதியின் ஏற்பிசைவானது மேலதிக தற்காலிக வேறுபாட்டினை ஏற்படுத்துவதுடன், அதற்காக மேலும் ஒரு பிற்போடப்பட்ட வரித்தொகை ஏற்பிசைவு செய்யப்படும்.

B11 LKAS 12 இன் முன்னிலைப்படுத்தல், வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் எவ்வாறு இருந்த போதிலும், உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதன் விளைவாக பிற்போடப்பட்ட வரிச் சொத்தை அல்லது பிற்போடப்பட்ட வரிப் பரிப்பை ஏற்பிசைவு செய்யும்போது, உரிமம் அந்த பிற்போடப்பட்ட வரித் தொகையினை மொத்த பிற்போடப்பட்ட வரிச் சொத்தில் (பரிப்பில்) உள்ளடக்காது. அதற்குப் பதிலாக, உரிமம் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு

மீதிகளின் ஏற்பிசைவினால் ஏற்படும் பிற்போடப்பட்ட வரிச் சொத்தினை (பரிப்பினை) கீழே தரப்பட்டுள்ள ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

(a) ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவுமீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்காக முன்னிலைப்படுத்தப்படும் வரிசை உருப்படிகளுடன்/ அல்லது

(b) தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு வரவுமீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்குப் பக்கத்தில் வேறான வரிசை உருப்படியாக.

B12 அதேபோல, உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதனால் ஏற்படும் பிற்போடல் வரிச் சொத்தின் (பரிப்பின்) மாற்றங்களை ஏற்பிசைவு செய்யும்போது, உரிமம் அந்த பிற்போடல் வரி மாற்றத் தொகையினை LKAS 12 இற்கு அமைய இலாப, நட்ட மற்றும் பிறமுற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தும் வரிச் செலவு (வருமான) வரிசை உருப்படியில் உள்ளடக்கமாட்டாது. அதற்குப் பதிலாக ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்வதால் பிற்போடப்பட்ட வரிச் சொத்தில் (பரிப்பில்) ஏற்படும் மாற்றங்களை கீழே தரப்பட்ட ஒரு வழியில் முன்னிலைப்படுத்தும்:

(a) இலாப, நட்ட மற்றும் பிறமுற்றடக்க வருமானக் கூற்றுக்களில் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களுக்காக முன்னிலைப்படுத்தும் வரிசை உருப்படிகளுடன்/அல்லது

(b) ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களுக்காக இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்திய தொடர்புபட்ட வரிசை உருப்படிகளுக்குப் பக்கத்தில் வேறான வரிசை உருப்படியாக.

## LKAS 33 *பங்கொன்றிற்கான வருமானம்* நியமத்தின் பிரயோகம்

B13 LKAS 33 இன் பந்தி 66 ஆனது சில உரிமங்கள் அவற்றின் இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்றுக்களில் தொடரும் தொழிற்பாடுகளிலிருந்தான இலாப அல்லது நட்டம் மற்றும் மேன்னிலை உரிமத்தின் சாதாரண உரிமையாண்மைப் பங்குதாரருக்கு உரிய இலாபம் அல்லது நட்டம் ஆகிய இரண்டிற்கும் பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட வருமானங்களை முன்னிலைப்படுத்துவதனை தேவைப்படுத்துகின்றது. அத்துடன், LKAS 33 இன் பந்தி 68 ஆனது, முடிவுக்குக் கொண்டுவந்த தொழிற்பாட்டை அறிக்கையிடும் உரிமம் முடிவுக்குக் கொண்டுவந்த தொழிற்பாட்டிற்காக பங்கொன்றிற்கான அடிப்படை மற்றும் ஐதாக்கப்பட்ட தொகைகளை இலாப, நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிக்காட்டுவதனை தேவைப்படுத்துகின்றது.

B14 LKAS 33 இற்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்படும் ஒவ்வொரு பங்கொன்றிற்கான வருமானத் தொகைக்கும், இந்த நியமத்தினை பிரயோகிக்கும் உரிமம், ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் நிகர மாற்றத்தினை உள்ளடக்காத தொகைகள் தவிர, அதே முறையில் கணிப்பிடப்படும் பங்கொன்றிற்கான மேலதிக அடிப்படை மற்றும் ஐதாக்கிய வருமான தொகைகளை முன்னிலைப்படுத்தும். LKAS 33 இன் பந்தி 73 இற்கு இசைவாக, உரிமம் இந்த நியமத்தின் பந்தி 26 தேவைப்படுத்தும் பங்கொன்றிற்கான வருவாயினை முன்னிலைப்படுத்திய சகல காலங்களுக்கும் LKAS 33 இனால் தேவைப் படுத்தப்பட்ட பங்கொன்றிற்கான வருமானத்திற்கு தரப்படும் அதே முக்கியத்துவத்துடன் முன்னிலைப்படுத்தும்.

## LKAS 36 சொத்துக்களின் சேத இழப்பு நியமத்தின் பிரயோகம்

B15 உரிமத்தின் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் எந்தவொரு சேத இழப்பினதும் இனங்காணல், ஏற்பிசைவு, அளவீடு மற்றும் எதிர்ப்பதிவு ஆகியவற்றிற்கு உரிமம் அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ந்து பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றன. இதன் தொடர் விளைவாக, பிறம்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு LKAS 36 பிரயோகிக்கப்படமாட்டாது.

B16 எனினும், உரிமமொன்று ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை உட்படுத்திய காசுப் பிறப்பாக்க அலகினை (cash generating unit) சேத இழப்பிற்காக சோதனை செய்யவேண்டுமென LKAS 36 தேவைப்படுத்தக்கூடும். இந்தச் சோதனையானது காசு பிறப்பாக்க அலகு நன்மதிப்பையும்

கொண்டிருப்பதால் அல்லது அந்த காசு பிறப்பாக்க அலகு தொடர்பில் LKAS 36 இல் விபரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேத இழப்புக் காட்டிகளை இனங்கண்டமையால் தேவைப்படலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் காசுப் பிறப்பாக்க அலகின் மீளப்பெறற்தகு தொகை மற்றும் முன்கொணரற் தொகை ஆகியவற்றை இனங்காண்பதற்கான தேவைப்பாடுகளை LKAS 36 இன் பந்திகள் 74-79 கொண்டுள்ளன. சேத இழப்புச் சோதனைத் தேவைகளுக்காக, ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகள் எதுவும் காசுப் பிறப்பாக்க அலகின் முன்கொணரற் தொகையில் உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு உரிமம் அந்தத் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும். LKAS 36 இன் எஞ்சிய தேவைப்பாடுகள் இந்தச் சோதனையின் விளைவாக ஏற்பிசைவு செய்யப்படும் எந்தவொரு சேதஇழப்பு நட்டத்திற்கும் பிரயோகிக்கப்படும்.

## SLFRS 3 *வியாபார இணைப்புக்கள்* நியமத்தின் பிரயோகம்

B17 SLFRS 3 இன் பிரதான அடிப்படையானது, வியாபாரமொன்றின் சுவீகரிப்பாளர் சுவீகரித்த சொத்துக்களையும் ஏற்றுக்கொண்ட பரிப்புக்களையும் சுவீகரிப்புத் திகதியில் அவற்றின் சீர்மதிப்புக்களில் ஏற்பிசைவு செய்வதாகும். SLFRS 3 அதன் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுத் தத்துவங்களுக்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளையே வழங்குகின்றது. இந்த நியமத்தின் பந்தி B18 மேலதிக விதிவிலக்கு ஒன்றினை தருகின்றது.

B18 உரிமமொன்று அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய GAAP கணக்கீட்டுக் கொள்கையினை தொடர்ந்தும் பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றது. இதன் தொடர்விளைவாக, ஒரு வியாபாரத்தினை சுவீகரிக்கும் உரிமம் அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் சுவீகரிப்புத் திகதியில் சுவீகரிப்பிற்கு ஆளாகும் உரிமத்தின் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டிற்கு பந்திகள் 11-12 இற்கு அமைய தாபிக்கப்பட்ட அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும். சுவீகரிப்பிற்குள்ளாகும் உரிமத்தின் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகள், சுவீகரிப்பாளரின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் சுவீகரிப்பிற்குள்ளாகும் உரிமம் அந்த மீதிகளை அதன் சொந்த நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்கின்றதா என்பதை அக்கறைப்படுத்தாது, சுவீகரிப்பாளரின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

## SLFRS 5 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள் நியமத்தின் பிரயோகம்

B19 உரிமமொன்று அதன் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேதஇழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கு அதன் முந்திய கணக்கீட்டுக் கொள்கையை தொடர்ந்தும் பிரயோகிப்பதனை பந்திகள் 11-12 தேவைப்படுத்துகின்றன. இதன் காரணமாக SLFRS 5 இன் அளவீட்டுத் தேவைப்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது.

B20 முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளுக்காக ஒரு தனியான தொகை இலாப, நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக்கூற்றில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டுமென SLFRS 5 இன் பந்தி 33 தேவைப்படுத்துகிறது. முடிவுக்கு வந்த தொழிற்பாடுகளை முன்னிலைப்படுத்தும் போது அந்தப் பந்தியின் தேவைப்பாடுகளை கவனத்திற்கொள்ளாது, இந்த நியமத்தை பிரயோகிக்க தெரிவு செய்யும் உரிமம், முடிவுக்கு வந்த தொழிற்பாட்டின் விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை SLFRS 5 இன் பந்தி 33 தேவைப்படுத்தும் வரிசை உருப்படிகளில் உள்ளடக்காது. அதற்குப் பதிலாக, முடிவுக்கு வந்த தொழிற்பாட்டின் விகித ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகளிலிருந்து ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை உரிமம் கீழேதரப்பட்டுள்ள ஏதாவது ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

(a) இலாப, நட்டம் தொடர்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்கான வரிசை உருப்படிகளில்/அல்லது

(b) இலாப, நட்டம் தொடர்பான ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளில் மாற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்கான வரிசை உருப்படிக்குப் பக்கத்தில் வேறான ஒரு வரிசை உருப்படியாக.

B21 அவ்வாறே, SLFRS 5 இன் பந்தி 38 இனைக் கணக்கிற்கொள்ளாது, உரிமம் விற்பனைக் குழுமமொன்றினை முன்னிலைப்படுத்தும்போது, அது விற்பனைக் குழுமத்தின் பகுதியாக அமையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளின் மொத்தத் தொகையினை SLFRS 5 இன் பந்தி 38 தேவைப்படுத்தும் வரிசை உருப்படிகளில் உள்ளடக்க மாட்டாது. அதற்குப் பதிலாக, உரிமம் விற்பனைக் குழுமத்தின் பகுதியாக அமையும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளின் மொத்தத் தொகையினை கீழே தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு முறையில் முன்னிலைப்படுத்தும்:

(a) ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்காக முன்னிலைப்படுத்தப்படும் வரிசை உரும்படிகளினுள்/அல்லது

(b) ஏனைய ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளின் வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகளுக்குப் பக்கத்தில் வேறு உருப்படியாக.

B22 உரிமமானது, விற்பனைக் குழுமம் அல்லது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடு தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை மற்றும் அந்த மீதிகளில் மாற்றங்களை தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரிசை உருப்படியில் உட்படுத்துவதற்கு தெரிவு செய்யுமேயாகில், அவற்றை இந்த நியமத்தின் பந்தி 33 இல் விபரித்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரிசை உருப்படிகளின் பகுப்பாய்வின் பகுதியாக வேறாக வெளிக்காட்டுதல் அவசியமாகும்.

## SLFRS 10 *ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்* மற்றும் LKAS 28 *கூட்டுக் கம்பனிகளிலும் கூட்டுத் தொழில் முயற்சிகளிலும் முதலீடுகள்* ஆகிய நியமங்களின் பிரயோகம்

B23 "ஒரு மேன்நிலை உரிமம் ஒத்த சந்தர்ப்பங்களில் ஒரே விதமான ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி ஒன்றித்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கவேண்டும்" என SLFRS 10 இன் பந்தி 19 தேவைப்படுத்துகின்றது. இந்த நியமத்தின் பந்தி 8 ஆனது, இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டதும், இந்த நியமத்தினை பிரயோகிக்க தெரிவு செய்கின்றதுமான உரிமம் அதன் சகல விகித ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளிலும் இருந்து ஏற்படுகின்ற எல்லா ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கு அதன் அனைத்து தேவைப்பாடுகளையும் பிரயோகிக்க வேண்டுமென கேட்டுள்ளது. இதன் தொடர்விளைவாக, மேன்நிலை உரிமமொன்று இந்த நியமத்திற்கு அமைய அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்தால், அதன் சகல உபகம்பனிகளிலும் ஏற்படும் ஒழுங்குபடுத்தற் பிற்போடற் கணக்கு மீதிகளுக்கும் அதே கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும். இது, உபகம்பனிகள் அந்த மீதிகளை அவற்றின் சொந்த நிதிக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்கின்றதா என்பதனை கணக்கிற்கொள்ளாது, பிரயோகிக்கும்.

B24 அவ்வாறே, உரிமையாண்மை முறையினை பிரயோகிக்கும்போது, "ஒத்த சந்தர்ப்பத்தில் ஒரேவித ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி உரிமத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்" என LKAS 28 இன் பந்திகள் 35-36 தேவைப்படுத்துகின்றன. இதன் தொடர் விளைவாக, உரிமையாண்மை முறையை பிரயோகித்தலில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவு, அளவீடு, சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு விலக்கலுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் முதலீடுசெய்யும் உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இசைவானதாக அமையும் பொருட்டு, கூட்டுக்கம்பனியின் அல்லது கூட்டத் தொழில் முயற்சியின் கொள்கைகள் செம்மையாக்கம் செய்யப்படும்.

## SLFRS 12 *பிற உரிமங்களில் கொண்டுள்ள நாட்டங்களின் வெளிக்காட்டல்* நியமத்தின் பிரயோகம்

B25 உரிமம், அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான கட்டுப்பாடற்ற பாத்தியதை உடைய அதன் ஒவ்வொரு உபகம்பனிக்கும், அறிக்கையிடற் காலத்தின்போது உப கம்பனியின் கட்டுப்பாடற்றோர் பாத்தியதைக்கு ஒதுக்கிய இலாபம் அல்லது நட்டத்தை வெளிக்காட்ட வேண்டுமென SLFRS 12 இன் பந்தி 12(e) தேவைப்படுத்துகின்றது. இந்த நியமத்திற்கு அமைவாக ஒழுங்குபடுத்தற் பிற்போடல்

கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்யும் உரிமமொன்று SLFRS 12 இன் பந்தி 12(e) இனால் வெளிக்காட்டல் தேவைப்படுத்தப்படும் தொகைகளுள் உட்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளில் நிகர மாற்றங்களை (அசைவுகளை) வெளிக்காட்டும்.

B26 உரிமம், அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான கட்டுப்பாடற்ற பாத்தியதை உடைய ஒவ்வொரு உபகம்பனிக்கும், SLFRS 12 இன் பந்தி B10 இல் குறிப்பிடப்பட்ட உபகம்பனி பற்றிய தொகுக்கப்பட்ட நிதித் தகவல்களை வெளிக்காட்ட வேண்டுமென SLFRS 12 இன் பந்தி 12(g) தேவைப்படுத்துகின்றது. அதேபோல, அறிக்கையிடும் உரிமத்திற்கு பொருண்மையான ஒவ்வொரு கூட்டுத் தொழில் முயற்சி மற்றும் கூட்டுக் கம்பனிக்கும் SLFRS 12 இன் பந்திகள் B12-B13 இல் குறிப்பிட்ட தொகுக்கப்பட்ட நிதித்தகவல்களை உரிமம் வெளிக்காட்ட வேண்டுமென SLFRS 12 இன் பந்தி 21(b)(ii) தேவைப்படுத்துகின்றது. SLFRS 12 இன் பந்தி 21(c) இற்கு அமைவாக தனித்தனியாக பொருண்மையற்ற ஏனைய சகல கூட்டுக்கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில் முயற்சிகள் ஆகியவற்றிற்கு உரிமம் வெளிக்காட்ட வேண்டிய நிதித் தகவல்களின் தொகுப்பினை SLFRS 12 இன் பந்தி B16 குறிப்பிடுகின்றது.

B27 இந்த நியமத்திற்கு அமைய ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளை ஏற்பிசைவு செய்யும் உரிமமொன்று SLFRS 12 இன் பந்திகள் 12, 21, B10, B12, B13, மற்றும் B16 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக, மொத்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு வரவு மீதி, மொத்த ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு செலவு மீதி மற்றும் SLFRS 12 இன் அந்த வெளிக்காட்டல் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு உரிமத்திற்கும் அந்த மீதிகளில் நிகர மாற்றங்களை இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டவை மற்றும் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டவையாக பகுத்து வெளிக்காட்டும்.

B28 உரிமமொன்று ஒரு உபகம்பனி மீது கட்டுப்பாட்டை இழப்பதனால் ஏற்படுகின்றதும், SLFRS 10 பந்தி 25 இற்கு அமைய கணிக்கப்படுவதுமான இலாபம் அல்லது நட்டத்தை ஏற்பிசைவு செய்யும் போது, வெளிக்காட்ட வேண்டிய தகவல்களை SLFRS 12 இன் பந்தி 19 குறிப்பிடுகின்றது. இந்த நியமத்தை பிரயோகிக்க தெரிவு செய்யும் உரிமம் SLFRS 12 இன் பந்தி 19 இல் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக, முன்னைய உபகம்பனியில் கட்டுப்பாட்டை இழந்த திகதியில் ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்கு மீதிகளின் ஏற்பிசைவுவிலக்கல் சம்பந்தமான இலாபம் அல்லது நட்டத்தின் பகுதியையும் வெளிக்காட்டும்.

## பின்னிணைப்பு C

## நடைமுறைக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்

இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒன்றித்த பகுதியாகும்.

### நடைமுறைக்கு வரும் திகதியும் இடைக்கால ஏற்பாடுகளும்

### நடைமுறைக்கு வரும் திகதி

C1 உரிமமொன்றின் முதலாவது வருடாந்த SLFRS நிதிக்கூற்றுக்கள் 2016, சனவரி 1 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் ஆரம்பமாகும் காலத்திற்காக இருப்பின் அந்த உரிமம் இந்த நியமத்தினை பிரயோகிக்கும். இந்தத் திகதிக்கு முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமமொன்று இந்த நியமத்தை முந்திய காலமொன்றிற்கான முதலாவது வருடாந்த SLFRS நிதிக்கூற்றுக்களுக்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.